# LAABH SAMACHAR

Volume: 08 | Issue : 12 | March 2020 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE

Emirates
IndiGo
Lufthansa
spiceJet
flying for everyone

அஸ்கி பிளையிட் டிக்கெட் அவ்ரோஜொல்
உன்னோ மோளும் அப்பை

K.K. Nagar, Madurai. Mob : 9787 066 066

வேதவல்லி ஹாலிடேஸ்

புதிய உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெறுகிறது

*அவோ!... மிளோ!... ஹொடோ!...*

To

## யொலீம்

*Membership Mela* **2020**

நாள்: 12.04.2020 (ஞாயிறு) நேரம்: காலை 10.30 மணி

இடம்: ஸ்ரீமந் நடன கோபால நாயகி மந்திர், தெப்பக்குளம், மதுரை






SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்
வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer:

## Madurai Pipe

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems



Borewell Submersibles



Single Phase Jet Pumps



Pressure Boosting Systems



Electric Motors



Single Phase Domestic Pumps



Agricultural Monoblocks



Open-well Submersibles

# பொலீம்

*Membership Mela* **2020**

**புதிய உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.
புதிதாக இணைய விரும்பும் அங்கத்தினர்கள் இந்த விழாவிற்கு
கலந்து கொண்டு பயன்பெற அழைக்கிறோம்.**

நாள்: 12.04.2020 (ஞாயிறு) நேரம்: காலை 10.30 மணி
இடம்: ஸ்ரீமந் நடன கோபால நாயகி மந்திர், தெப்பக்குளம், மதுரை

*வெளிவட்டத்தில் உள்ள தொழில்முனைவோர்கள் – சேம்பரில் இணைய கீழ்கண்ட சேம்பரின் சிறப்பு அழைப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்*

T.S. சிவப்பிரகாஷ் - 98652 23373 - திண்டுக்கல்
K.K. தினகரன் - 98409 60833 - சென்னை
K.Ve. நாகராஜன் - 98427 41740 - ஓசூர்
கணேஷ் கொண்டா - 93222 26337 - மும்பை
T.S. ரவிசன் - 90037 87411 - திருப்பூர்
V.N.T. சுரேஷ் - 98430 48849 - வேலூர்
சாந்தி ரகுநாத் - 94432 33903 - ஆரணி
T.S. ஜெயபாலன் - 99022 64195 - பெங்களூரு
N.S. ராஜன் - 98432 60553 - கோவை
D.R. வாசுதேவன் - 93448 89241 - பரமக்குடி
K.S. கிஷோர் குமார் - 84700 14488 - புது டில்லில்

**உறுப்பினர்களாக இணைய - தொடர்புக்கு:**

G.R. சுப்பிரமணியன் – 94427 52044, V.R. சேகர் – 93441 04694, T.S.S. நந்தலால் – 99435 08192
L.N.R. தாமோதரன் – 97894 51477, K.R.B. சிவப்பிரகாஷ் – 94433 66251, G.R. விஜய சத்ய நாராயணன் – 98421 66390

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| A.T. Baskar | Member | 94429 37409 |
| **PRO** | | |
| P.M. Murali | Chairman | 94434 68476 |
| S.K.B. Chandraprakash | Secretary | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |




# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெ ஏகோ மொன்னு மொஹெ*

## நமஸ்கார்...

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சிட்கான் வர்த்தக மாநாடு நடத்துவது போல, பொலீம் என்ற பெயரில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை மேளா நடத்தப்படுகிறது. அதன்படி வருகிற ஏப்ரல் மாதத்தில் உறுப்பினர் சேர்க்கை மேளா நடைபெற இருக்கிறது. புதிய உறுப்பினர்களாக சேர விரும்புவோர் இந்த விழாவின் மூலம் இணைந்து பயன் பெறலாம். சேம்பர் அங்கத்தினர்கள் புதிய உறுப்பினர்களை அறிமுகம் செய்து வைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கல்வியில், சிறந்த மாணவர்களாக தென் மாவட்ட மாணவர்களே சாதித்து வருவதை நாம் அறிவோம். ஆனால் அவர்களின் வேலைவாய்ப்புக்கு மேலைநாடுகள், வட மாவட்டங்களை நோக்கியே உள்ளது. அதற்காக, தென்மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெருக்கும் வகையில் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்துவது, அதோடு, மதுரையில் நிரந்தர தொழிற்காட்சி வளாகம் அமைப்பது போன்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவை மதுரைக்கு வருகை தந்த தமிழக முதல்வர் மாண்புமிகு எடப்பாடி பழனிச்சாமி அவர்களிடம் நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து அளித்தனர்.

மதுரை, ஒரு மருத்துவ சுற்றுலா மையமாக உருவாக வேண்டும் என்பது நமது சேம்பரின் நோக்கம். அதன்படி மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான பணிகளைத் துரிதப்படுத்தல், மதுரையில் ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் கொண்ட மனுவை நமது சேம்பர் நிர்வாகிகள் மதுரைக்கு வருகை தந்த சுகாதாரத் துறை அமைச்சர் திரு. ஹர்ஷவர்தன் அவர்களை நேரில் சந்தித்து அளித்தனர்.

நமது சேம்பரின் கோரிக்கைகள் நிறைவேறும் என்று நம்புகிறோம்.

நன்றி

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து

சௌராஷ்டிர மொழியில்
பனிம்த[4]ம்னா பாஞ்பொ[3]லம் ரெத்து பனிம்த[4]மன்
தோணிமிள்ள த[4]ம்னா பு[4]ஞ்சிரு

**பொருள்:** உறுதியான சக்கரங்கள் உள்ளனவானாலும் உயரமான தேர்கள் கடலில் ஓடமாட்டா. கடலில் ஓடுகின்ற படகுகளும் நிலத்தில் ஓடமாட்டா.

அதிகாரம் 50 | இடன் அறிதல் (காரியம் செய்யத்தக்க இடத்தை அறிதல்) | அரசியல்

## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

**15.02.2020** - இந்தோனேசிய வர்த்தக மேம்பாட்டு இயக்குனர் திரு. **குமரா ஜெட்டி** மற்றும் மார்க்கெட்டிங் நிர்வாகி திரு. **மேத்தியூ** ஆகியோரை நமது அலுவலகத்தில் அழைத்து சேம்பர் நிர்வாகிகள் சந்தித்து பேசினர். இதில், ஏற்றுமதி வர்த்தக வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

**16.02.2020** - சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** மற்றும் சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. K.V. **பாலா** அவர்கள் பெங்களூருவில் உள்ள **குஸோ** அமைப்பின் ஆண்டு விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு உரையாற்றினர்.

**23.02.2020** - ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 3வது **செயற்குழு கூட்டம்** ஸ்ரீ சதானந்த கோசாலாவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**25.02.2020** - சௌபாக்ய தொழில் கூட்டமைப்பின் ஆண்டு விழாவிற்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

**25.02.2020** - மதுரை மாவட்ட பா.ஜ.க தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நமது சேம்பர் உறுப்பினர் திரு. **கே.கே. ஸ்ரீநிவாசன்** அவர்களை சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

**01.03.2020** - மதுரை விமான நிலையத்தில், தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. **எடப்பாடி பழனிச்சாமி** மற்றும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. **ஹர்ஷ்வர்தன்** ஆகியோரை நமது சேம்பர் நிர்வாகிகள் நேரில் சந்தித்து கோரிக்கை மனுக்களை வழங்கினர். இந்த சந்திப்பிற்கு உதவிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. **ராம்பாபு** அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

**03.03.2020** - முதல் முறையாக புதுமையான முறையில் சேம்பர்-ல் மகளிர் தினத்தை முன்னிட்டு **மகளிர்க்கான சிறப்பு தொழில் கூட்டம்** நடத்தப்பட்டது. இந்த கூட்டத்திற்கு சேம்பர் அங்கத்தினர்களின் இல்லத்தரசிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தை பெண்களே நடத்திச் சென்றது குறிப்பிடத்தக்கது. கூட்டத்திற்கு பேச்சாளர்களாக திருமதி. P.K. **புனிதவதி**, சத்யபாமா கேட்டரிங், திருமதி. **ம.க. துர்கா தேவி**, டாக்டர். **பானு ரமேஷ் பாபு** ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். கூட்டத்தை சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார். திருமதி. **கார்த்திகா லட்சுமி குமரன் ஜகுவா** அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

– K.K. தினேஷ்

## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது ஔவையின் வாக்கு, கடந்த 2 மாதங்களாக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அதற்கான அடித்தளம் அமைத்து வருகிறது.

நம்முடைய அங்கத்தினர்கள் சிலர் திரைகடல் ஓடி திரவியம் சேர்த்து வருகின்றனர். அப்பணியை அனைத்து அங்கத்தினர்களும் மேற்கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், வந்த வாய்ப்பை துளியும் பிசகாமல் பயன்படுத்திக் கொண்டது நமது சேம்பர்.

நமது சேம்பர் அங்கத்தினர் திரு. T.S. **வித்யாசாகர்** அவர்களின் முயற்சியால் அன்று ஜிம்பாப்வே தொழில்துறை இணை அமைச்சர் திரு. ராஜ் மோடி அவர்கள் மதுரைக்கு வந்து சேம்பர் அங்கத்தினர்களை சந்தித்தார். மிக விரைவில் அவர் வியாபாரம் மேற்கொள்வதற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் மற்றும் ஜிம்பாப்வே சேம்பர் ஆப் காமர்ஸ்-ம் இணைந்து செயல்பட அழைப்பு விடுத்தார்.

ஒரு வெளிநாட்டு அமைச்சர் சேம்பர் அங்கத்தினர்களைச் சந்தித்து கலந்துரையாடியது இதுவே முதல் முறை. இந்த சந்திப்பை மிகவம் சிரத்தையோடும், நேர்த்தியாகவும் கையாண்ட நிகழ்ச்சி குழு சேர்மனான திரு. T.R. **சரவணன்** அவர்களுக்கும் சேம்பர் அங்கத்தினர் திரு. T.S. **வித்யாசாகர்** அவர்களுக்கும் சேம்பர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஜிம்பாப்வே நாட்டில் கனிம வளம், சோலார் சக்தி மற்றும் நெகிழி வியாபாரத்திற்கு ஏற்ற இடமாக சுட்டிக்காட்டி பேசினார் இணை அமைச்சர் திரு. ராஜ் மோடி அவர்கள். மேலும் அவர் வியாபாரத்திற்கு வேண்டிய அனைத்து வகையான உதவிகளை செய்வதாகவும் உறுதி கூறினார். மிக விரைவில் அவரது அழைப்பு வரும் என்ற எதிர்பார்க்கிறோம்.

இதே போன்று, கடந்த பிப்ரவரி 15ம் தேதி அன்று, இந்தோனேஷிய வர்த்தக மேம்பாட்டு இயக்குனர் திரு. குமரா ஜெட்டி மற்றும் சீனியர் மார்க்கெட்டிங் எக்ஸிக்யூட்டிவ் திரு. மேத்தியூ ஆகியோர் சேம்பர் அலுவலகத்திற்கு வருகை புரிந்தனர். அவர்களுடன் சேம்பர் நிர்வாகிகள் கலந்துரையாடினார்கள். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகம் குறித்து பேசப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- B.S. ஜெனார்த்தனன்


Sourashtra Chamber of Commerce
Bank Details:
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our Whatsapp No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
93441 97952


BVK GROUP
Best Compliments from
Shri. Bala V Kutti
Chairman
BVK GROUP OF COMPANIES
"Kothari Building" 4th floor 114 M G Road, Nungambakkam,
Chennai - 600 034, India. Phone : +91 44 2833 1310 / 0867
Indowind Enegry Ltd
Indus Finance Corporation Ltd
Indeco Ventures limited
Bekae Properties Pvt Ltd


WOMENS' DAY CELEBRATION
WOMEN in BUSINESS

# WOMEN in BUSINESS

*SCC Monthly Program-March'20*



திருமதி. P.K. புனிதவதி



டாக்டர். பானு ரமேஷ் பாபு



திருமதி. ம.க. துர்கா தேவி

இன்று மகளிர் பலர் பல துறைகளில் சாதித்து வருகின்றனர். ஆனால், தொழில் துறைகளில் எண்ணிலடங்கும் அளவிற்கே ஈடுபட்டுள்ளனர். மகளிர் தொழில்முனைவோர்களுக்கு அரசு பல்வேறு சலுகைகள் அளித்து வருகிறது. இதனை பெண்கள் வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்டு முன்னேற்றப் பாதையை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாயக்கிழமை நமது சேம்பர் தொழில் குறித்த கூட்டத்தை நடத்தி வருகிறது. இந்த மார்ச் மாதத்தில் மகளிர் தினத்தை முன்னிட்டு முதன் முறையாக புதுமையாக மகளிர்க்கான தொழில் கூட்டமாக நடத்தப்பட்டது. 03.03.2020 அன்று மாலை **Women in Business** என்ற தலைப்பில் சேம்பர் நடத்தியது.

இந்த கூட்டத்தின் நோக்கம், இல்லதரசிகள், பெண்கள் நேரடியாக தொழிலில் ஈடுபடாவிட்டாலும், தந்தை அல்லது கணவரின் துணையுடன் தொழில் குறித்து அறிந்து இயன்றளவு செயல்பட்டால் தாமும் ஒரு பெண் தொழில் முனைவோராக செயல்பட முழு ஈடுபாடு வரும் என்பதே.

இக்கூட்டத்திற்கு சேம்பர் அங்கத்தினர்கள் பலர் தங்கள் இல்லத்தரசிகளுடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சேம்பர் தலைவர் திரு. **குமரன்** B. **ஜகுவா** அவர்கள் கூட்டத்திற்கு வரவேற்புரையாற்றினார். கூட்டத்தை தலைமை பொறுப்பேற்று நடத்த தமது இல்லத்தரசியான திருமதி. **கார்த்திகா லட்சுமி** அவர்களை அழைத்தார். இதனை ஏற்ற அவர், கூட்டத்தை சிறப்பாக நடத்திக் கொடுத்தனர். சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தார்.


திருமதி. P.K. **புனிதவதி**, சத்யபாமா கேட்டரிங், திருமதி. ம.க. **துர்கா தேவி**, முனைவர்ப்பட்ட ஆய்வாளர், தியாகராஜர் கல்லூரி மற்றும் டாக்டர். **பானு ரமேஷ்** பாபு, ஹெர்பல் மூலிகை மருத்துவ ஆலோசகர் ஆகியோர் சிறப்புப் பேச்சாளர்களாக கலந்து கொண்டுபேசினர்கள்.

சிறப்புப் பேச்சாளர்கள் மூவரும் திருமணத்திற்குப்பின் சாதித்தவர்கள். திருமதி. P.K. **புனிதவதி** அவர்கள், தம் கணவருடன் இணைந்து பல்வேறு தொழில் துறைகளில் ஈடுபட்டு பிரச்சனைகளை எதிர்கொண்டு தற்போது கேட்டரிங் துறையில் ஜொலித்து நிற்கிறார். முனைவர். **ம.க. துர்கா தேவி** அவர்கள், திருமணத்திற்கு பிறகு தமிழில் முனைவர் பட்டம் பெற்று இன்று சிறப்புப் பேச்சாளராக வளர்ந்து வருகிறார். டாக்டர். **பானு ரமேஷ் பாபு** அவர்கள், திருமணத்திற்கு பிறகு, ஹெர்பல் மூலிகை மருத்துவம் படித்து பட்டம்பெற்று அதன்பிறகு தம் கணவருடன் இணைந்து மருந்துகள் தயாரித்து விற்பனை செய்ததுடன், மருத்து ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

ஒரு பெண்ணாக திருமணத்திற்கு பிறகும் சாதிக்க முடியும் என்று தம்மை நிரூபித்துள்ளார்கள். சிறப்புப் பேச்சாளர்களின் உரைக்குப்பிறகு, திருமதி. நந்தினி சூர்யநாராயணன் அவர்களின் கைவண்ணத்திலான உருவான கலைநயமிக்க புகைப்படங்களை கூட்டத்தில் காண்பித்தார்.


பிறகு, திருமதி. **ஜெயந்தி சேகர்** மற்றும் திருமதி. **சந்திரகலா குமரேசன்** ஆகியோர் பெண்கள் தின வாழ்த்துரை வழங்கினர். சிறப்புப் பேச்சாளர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கி சேம்பர் கௌரவித்தது.

இறுதியாக, திருமதி. **திவ்யா யோகேஷ்** அவர்கள் நன்றி நவில... கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

Available in :
15kg Tin, 1 Ltr, 1/2 Ltr, 200ml, 100ml, 50ml

சாரதி®
நல்லெண்ணெய்



Manufactured & Packed by : RAJALAKSHMI OIL MILL
2/502, Narasingam Road, Krishna Nagar, Kadachanenthal, Madurai - 625 107. Ph : +91 452 650 5795 Cell : 97894 52896 e-mail : reachus@sarathioil.in

# மத்திய மற்றும் மாநில அமைச்சர்களுடன் சந்திப்பு





01.03.2020 அன்று தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. **எடப்பாடி பழனிச்சாமி** மற்றும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. **ஹர்ஷவர்தன்** ஆகியோரை மதுரை விமான நிலையத்தில் சேம்பர் பொதுச் செயலாளர் திரு. K.K. **தினேஷ்,** இணைச் செயலாளர் திரு. K.K. **குபேந்திரன்,** உறுப்பினர் திரு. T.E. **யோகேஷ்** மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. **ராம்பாபு** ஆகியோர் நேரில் சந்தித்து கோரிக்கை மனுவை வழங்கினர். அதன் விபரம் தினமணி நாளிதழில் 05.03.2020 அன்று வெளியானது. அச்செய்திப் பிரதி இத்துடன் காணலாம். இந்த சந்திப்புக்கு உதவிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. **ராம்பாபு** அவர்களுக்கு நன்றி.

## மதுரையை சுற்றுலா மண்டலமாக அறிவிக்க செளராஷ்டிரா வர்த்தக சபை வலியுறுத்தல்

**மதுரை, மார்ச் 4:** மதுரை மற்றும் சுற்றியுள்ள சுற்றுலா தலங்களை ஒருங்கிணைத்து சுற்றுலா மண்டலமாக அறிவிக்க வேண்டும் என தமிழக முதல்வரிடம், செளராஷ்டிரா வர்த்தக சபை வலியுறுத்தியுள்ளது.

ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மருத்துவக் கல்லூரிகளின் அடிக்கல் நாட்டுவிழாவுக்கு வருகைதந்த முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமியை மதுரை விமான நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை சந்தித்த வர்த்தக சபை பொதுச் செயலர் கே.கே.தினேஷ், இணைச் செயலர் கே.கே.குபேந்திரன், உறுப்பினர் டி.இ.யோகேஷ், முன்னாள் எம்பி ஏ.ஜி.எஸ்.ராம்பாபு ஆகியோர் இதுகுறித்த மனுவை அளித்தனர்.

அதன் விவரம்: காவிரி டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்புக்குரியது. அதேபோல, மதுரை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்கள் சுற்றுலா முக்கியத்துவம் மிகுந்தவை. இந்த சுற்றுலா தலங்களை ஒருங்கிணைத்து சுற்றுலா மண்டலமாக அறிவிக்க வேண்டும். இதன்மூலம் வெளிமாநில மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிகம் ஈர்க்க முடியும். பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், வேலையைப் பெறுவதற்கான தொழில்நுட்ப திறன்களைப் பெறுவதற்கும் மதுரையில் நிரந்தர திறன் பயிற்சி மையத்தை ஏற்படுத்தவும், தென்மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெருக்கும் வகையில் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்தவும் வேண்டும்.

கோவையில் உள்ள கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தைப் போல, மதுரையில் நிரந்தர தொழிற்காட்சி வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேபோல, மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ வர்தனிடமும் கோரிக்கை மனு அளித்துள்ளனர்.

அதில், சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் துறையின் வளர்ச்சிக்கும், இத் துறையில் அந்நியநேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான பணிகளைத் துரிதப்படுத்தவும், கோயில் நகரமான மதுரையை இந்தியாவின் பிற பகுதிகளுடன் இணைக்கும் வகையில் ரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும், சீர்மிகு நகர் திட்டத்தில் அறிவிக்கப்பட்டு இன்னும் தொடங்கப்படாமல் உள்ள பல்வேறு கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டங்களை விரைவில் தொடங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

தினமணி Thu, 05 March 2020 https://epaper.dinamani.com/c/49828681

# வர்த்தக ஆலோசனைக் கூட்டம்



15.02.2020 அன்று மாலை Indonesia Trade Promotion Council, Director திரு. **குமரா ஜெட்டி** மற்றும் Sr. Marketing Executive திரு. **மாத்தில்** ஆகியோர் நமது செளராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் அழைப்பினை ஏற்று சேம்பர் அலுவலகத்திற்கு வருகை தந்தனர். சேம்பர் நிர்வாகிகள், இளைய தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழில் வர்த்தக மேம்பாடு குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த கூட்டத்தை சேம்பர் செயற்குழு உறுப்பினர் திரு. T.R. **சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார். இந்தோனேஷியாவிலிருந்து பல வகையான பொருட்கள் இறக்குமதி செய்ய அதிக வாய்ப்புகள் இருப்பதாகவும். இறக்குமதி செய்ய தேவையான அனைத்து உதவிகளை செய்வதாகவும் அவர் உறுதி அளித்தார். மரம், குழந்தைகளுக்கான இனிப்பு வகைகள், அகர்பத்தியின் மூலப்பொருட்கள், பாமாயில், காட்டன், பாலிஸ்டர் நூல்கள் என பலவகையான பொருட்கள் இறக்குமதி செய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்தார். மேலும், வரும் செப்டம்பர் மாதம் நடைபெற இருக்கும் இந்தோனேஷிய எக்ஸ்போவில் கலந்து கொள்ள வருமாறு அழைப்பு விடுத்ததோடு மட்டுமல்லாமல் வருபவர்களுக்கு இரண்டு நாட்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்து தருவதாக உறுதியளித்தார்.

## இந்தோனேஷிய வர்த்தக குழுவினருடன் செளராஷ்டிர சபையினர் ஆலோசனை

**மதுரை, பிப். 15:** செளராஷ்டிரா வர்த்தக சபை பிரதிநிதிகளுடன், இந்தோனேஷிய வர்த்தக குழுவினர் சனிக்கிழமை இருதரப்பு வர்த்தகம் குறித்து ஆலோசனை நடத்தினர்.

மதுரை செளராஷ்டிரா வர்த்தக சபையின் சிறப்புக் குழுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் இந்தோனேஷிய வர்த்தக பிரதிநிதிகளுடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகம் குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தோனேஷிய வர்த்தக மேம்பாட்டு மைய இயக்குநர் குமரா ஜெட்டி, வர்த்தகப் பிரிவு அதிகாரி ஜஸ்டின் மேத்யூ ஆகியோர் பங்கேற்றனர்.

செளராஷ்டிரா வர்த்தக சபை சார்பில் பொதுச் செயலர் கே.கே. தினேஷ், முன்னாள் தலைவர் எஸ்.கே.ஆர்.ரமேஷ், இணைச் செயலர் ஜே.எஸ்.சாயி ஜீவன், செயற்குழு உறுப்பினர்கள் பி.எஸ்.ஜனார்த்தனன், டி.ஆர்.சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இருதரப்பு வர்த்தகம் குறித்து ஆலோசிக்கப்பட்டது. மேலும் இந்தோனேஷியாவில் நடைபெற உள்ள வர்த்தக பொருட்காட்சிக்கு, செளராஷ்டிரா வர்த்தக சபை சார்பில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது.

தினமணி Sun, 16 Febr https://epap







10.02.2020 அன்று தொழில் மேதை ஸ்ரீ. C.S. ராமாச்சாரி அவர்களின் நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது. அன்றைய தினம் சேம்பர் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. A.G.S. ராம்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

16.02.2020 அன்று பெங்களூருவில் நடைபெற்ற கர்நாடக யூனைட்ட் ஸௌராஷ்ட்ர அமைப்பு (குஸோ)–ன் 27–வது ஆண்டு விழாவில் தலைமை விருந்தினராக சேம்பர் முதுநிலைத் தலைவர் திரு. K.V. பாலா அவர்களும் சிறப்பு விருந்தினராக சேம்பர் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா அவர்களும் கலந்து கொண்டனர்.



25.02.2020 அன்று மதுரை மாவட்ட பா.ஜ.க. தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நமது சேம்பர் உறுப்பினர் திரு. K.K. ஸ்ரீநிவாசன் அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பொதுச் செயலாளர் திரு. K.K. தினேஷ், P.R.O. திரு. P.M. முரளீ மற்றும் வாழ்த்துக்குழு தலைவர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜீ ஆகியோர் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.


## ஜாதக பரிவர்த்தனை மேளா

கர்நாடக யூனைட்டட் ஸௌராஷ்ட்ர அமைப்பான குஸோ–வின் 31வது உலகளாவிய ஜாதக பரிவர்த்தனை மேளா 12.04.2020(ஞாயிறு) அன்று பெங்களூருவில் உள்ள ராஜாஜி நகரில் நடைபெறுகிறது.

தொடர்புக்கு: 99022 64195 / 94482 70410

# பொலீம்

*Membership Mela* **2020**

புதிய உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.
புதிதாக இணைய விரும்பும் அங்கத்தினர்கள் இந்த விழாவிற்கு கலந்து கொண்டு பயன்பெற அழைக்கிறோம்.

நாள்: 12.04.2020 (ஞாயிறு) நேரம்: காலை 10.30 மணி

இடம்: ஸ்ரீமந் நடன கோபால நாயகி மந்திர், தெப்பக்குளம், மதுரை

வெளிவட்டத்தில் உள்ள தொழில்முனைவோர்கள் – சேம்பரில் இணைய கீழ்கண்ட சேம்பரின் சிறப்பு அழைப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்

| | | |
|---|---|---|
| T.S. சிவப்பிரகாஷ் | 98652 23373 | திண்டுக்கல் |
| K.K. தினகரன் | 98409 60833 | சென்னை |
| K.Ve. நாகராஜன் | 98427 41740 | ஓசூர் |
| கணேஷ் கொண்டா | 93222 26337 | மும்பை |
| T.S. ரவிசன் | 90037 87411 | திருப்பூர் |
| V.N.T. சுரேஷ் | 98430 48849 | வேலூர் |
| சாந்தி ரகுநாத் | 94432 33903 | ஆரணி |
| T.S. ஜெயபாலன் | 99022 64195 | பெங்களூரு |
| N.S. ராஜன் | 98432 60553 | கோவை |
| D.R. வாசுதேவன் | 93448 89241 | பரமக்குடி |
| K.S. கிஷோர் குமார் | 84700 14488 | புது டில்லில் |

உறுப்பினர்களாக இணைய – தொடர்புக்கு:

G.R. சுப்பிரமணியன் – 94427 52044, V.R. சேகர் – 93441 04694, T.S.S. நந்தலால் – 99435 08192
L.N.R. தாமோதரன் – 97894 51477, K.R.B. சிவப்பிரகாஷ் – 94433 66251, G.R. விஜய சத்ய நாராயணன் – 98421 66390



O.V.K. பாஸ்கரன்

TRC

தரமான டைல்ஸ்கள், சரியான விலையில்
மன நிறைவுடன் வாங்க...

# ரிஜென்சி டிரேடிங் கம்பெனி

5, பெசன்ட் ரோடு, PTR கல்யாண மகால் பின்புறம்,
சொக்கிகுளம், மதுரை–625 002.
செல் : 73737 21281, 98428 21281, 99449 05051

அனைத்து முன்னணி கம்பெனி டைல்ஸ் & சானிட்டரிவேர்ஸ்



V.K. ஜெயசங்கர்


முயலின் வெற்றி அதன் காலடியில்;
மனிதனின் வெற்றி அவன் தன்னம்பிக்கையில்

NEXTGEN

Connect Collaborate Grow

Global Sourashtra Young Entrepreneurs Forum






# ON CAMPUS MEGA JOB FAIR 2020







26.02.2020 அன்று சௌராஷ்ட்ர கல்லூரியில் இளைய தொழில்முனைவோர் கூட்டமைப்பான **NEXTGEN** அமைப்பு மெகா வேலைவாய்ப்பு முகாமை முதன்முறையாக நடத்தியது. இதில் 12 நிறுவனங்கள், 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்த கொண்டனர். 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் தேர்வு செய்யப்பட்டனர்.


GSTIN : 33AADFN8595N1ZK ESTD :1968

**NIVARAN SAKTHI**

133-A, East Masi Street, 4 Feet Lane,
Madurai - 625 001. Ph : 0452 4230330, 8903534438
Website : www.jaiganga.com Email : jaigenga@gmail.com

ஆடைக்கு அளவு எடுக்கும் முறை

பேண்ட் இடுப்பு சுற்றளவும் & பேண்ட்
உயரம் மட்டும் போதும் சர்ட் அளவு எடுக்காதீர்கள்
இதற்கு உண்டான சர்ட் வைத்து அனுப்புவோம்

சர்ட் மட்டும் வேண்டுமானால் இடுப்பு சுற்றளவு
மட்டும் போதும் மற்ற அளவு தேவையில்லை

உதாரணம் லெட்சுமி HIP (இடுப்பு) 34" LENTH (உயரம்) 38"

ஆடைகள் 2 வருடம் உழைப்பு உத்திரவாதமுண்டு

S.T. கொரியரில் செலவு வசூல் செய்யாமல்
யூனிபார்ம் அனுப்பி வைப்போம்

INDIAN BANK A/C No.429080809 IFSC : IDIB000M129
SOUTH MASI STREET, MADURAI- 625 001.
NIVARANSAKTHI - Ph : 8903534438

குறைந்த லாபம் வைத்து தொழில் தர்மமாக செய்து வருகிறோம்.
52 ஆண்டுகளாக வளர்ந்து வருகிறோம்.

TN.GOVT.NURSING SERVICE (UNIFORMS)









போலீஸ் ஸ்டேஷனிலிருந்து 2வது கடை

காக்கி சர்ட், பேண்ட்

ஆட்டோ, லாரி டிரைவர்கள்
இந்த கார்டுடன் வந்தால் மட்டும்
சர்ட் ரூ.230 பேண்ட் ரூ.270

ஒரு ஜோடி ரூ.500 மட்டும்
கார்டு இல்லை என்றால் ரூ.650 ஆகும்
ஆடை 3வருட கால உழைப்பிற்கு உத்ரவாதம் உறுதி

ஆடைக்கு அளவு எடுக்கும் முறை

பேண்ட் இடுப்பு சுற்றளவும் மற்றும் பேண்ட் உயரம்
மட்டும் போதும், சட்டைக்கு அளவு தேவையில்லை
சரியான சர்ட் வைத்து அனுப்புவோம்.

சர்ட் மட்டும் வேண்டுமானால் இடுப்பு சுற்றளவு
மட்டும் போதும் மற்ற அளவுகள் வேண்டாம்

உதாரணம் ஆனந்தம் HIP (இடுப்பு) 35" LENTH (உயரம்) 39"

ATM-பாங்கில் பணம் கட்டிவிட்டு ரசீது நமக்கு
வாட்ஸ்அப்பில் அனுப்புங்கள்

S.T.கூரியரில் செலவு வசூல் செய்யாமல் சரக்கு அனுப்பி வைப்போம்

A/C No.30223714442 IFSC : SBIN 0002289
SBI, AMMAN SANNATHI, MADURAI -1.
JAIGENGA BRASSIERS Ph : 89035 34438

52 ஆண்டுகளாக சேவை செய்து வளர்ந்து வரும்

**ஜெய்கெங்கா**

ஆடை தயாரிப்பாளர்கள்

133, கீழமாசி வீதி, 4அடி சந்து, மதுரை -1.
போலீஸ் ஸ்டேஷனிலிருந்து 2வது கடை
விளக்குதூண் ஹரீஸ் பேக்கரியிலிருந்து 5வது கடை
Ph : 0452 - 4230330


# இரங்கல்



மறைவு:
16.02.2020



மறைவு:
26.02.2020



மறைவு:
04.03.2020

நமது சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அங்கத்தினர்களான விஜயகிருஷ்ணா டிரேடர் உரிமையாளர் திரு. T.R. **பாஸ்கரன்**, இஞ்சினியர் திரு. K.C.. **குப்புசாமி** மற்றும் ஆடிட்டர் திரு. T.T. **விஜயப்பிரகாஷ்** ஆகியோரின் ஆன்மா சாந்தி அடைய சேம்பர் இறைவனை வேண்டுகிறது.

அவர்களை பிரிந்து மீளாதுயிலில் உள்ள அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு சேம்பர் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

ஒருவனை மனிதனாக ஆக்குபவை உதவிகளும், வசதிகளும் அல்ல
அவனுக்கு ஏற்படும் இடையூறுகளும் துன்பங்களும் ஆகும்


# கொரோனா வைரஸ்

## யூனிசெப் கூறும் அறிவுரைகள்

கொரோனோ வைரஸ் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பது எப்படி என யூனிசெப் எனப்படும் ஐ.நா. சர்வதேச குழந்தைகள் அவசரகால நிதி அமைப்பு பல்வேறு வழிமுறைகளை வெளியிட்டுள்ளது.

- கொரோனா வைரஸ் என்பது 400-500 மைக்ரான் அளவுள்ள மிகப் பெரிய வைரஸ். அதனால் எந்த முக கவசத்தாலும் அது நுழைவதை தடுக்க முடியும்.
- இது காற்றின் மூலம் பரவுவது இல்லை.
- எந்த ஒரு உலோகத்தின் மீது இந்த வைரஸ் இருந்தாலும் 12 மணி நேரத்துக்கு அதில் இருக்கும். அதனால் சோப் மற்றும் தண்ணீர் மூலம் அடிக்கடி கைகளை கழுவ வேண்டும்.
- துணியின் மீது விழும்போது 9 மணி நேரத்துக்கு அது உயிர்ப்புடன் இருக்கும். அதனால் துணிகளை துவைத்து பயன்படுத்த வேண்டும். மேலும் இரண்டு மணி நேரம் வெயிலில் துணயை காய வைப்பதன் மூலம் வைரஸ் செயல்படாமல் தடுக்கலாம்.
- கைகளில் இருக்கும்போது 10 நிமிடங்களுக்கு வைரஸ் உயிர்ப்புடன் இருக்கும். அதனால் சானி டைசர் மூலம் கைகளை அடிக்கடி தூய்மைபடுத்தலாம்.
- இந்த வைரஸ் 26-27 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் கொல்லப்படுகிறது. அதனால் வெயில் பிரதேசங்களில் இதன் பாதிப்பு அதிகம் இருக்காது. அதேபோல் அடிக்கடி கொதிக்க வைத்த வெந்நீரை எடுத்துக்கொள்வதுடன் வெயில் படும்படி நிற்கலாம். ஐஸ்கிரீம் போன்ற குளிர்ச்சியான பொருட்களை எடுத்துக் கொள்ள வேண்டாம்.
- உப்பு கலந்த வெந்நீரில் வாயை கொப்பளிப்பதால் தொண்டையில் இருக்கும் வைரசை செயலிழக்க செய்ய முடியும். அதன் மூலம் நுரையீரலுக்கு வைரஸ் செல்வதை தடுக்கலாம்.

இவ்வாறு யூனிசெப் தெரிவித்துள்ளது.



### அறிகுறிகள்

- தொடர்ந்து காய்ச்சல்
- மூக்கு ஒழுகுதல், சளித்தொல்லை
- உடல்வலி மயக்கம், சோர்வு
- தலைவலி, வயிற்றுப்போக்கு,
- தொண்டை வலி, வறட்சி
- இருமல், மூச்சுத்திணறல்

### நோயை தவிர்க்கும் வழிமுறைகள்

- இருமும் பொழுதோ, தும்மும் பொழுதோ கைக்குட்டையை உபயோகிக்கவும்.
- கைகளை அடிக்கடி சோப்பின் மூலம் கழுவவும்
- மக்கள் அதிகம் கூடும் இடங்கள் தவிர்க்கவும்
- அதிக தண்ணீர், சுத்தமான நன்கு வேகவைத்த உணவை உட்கொள்ள வேண்டும்
- போதுமான ஓய்வு எடுக்க வேண்டும்.
- கட்டிப்பிடித்தல், முத்தமிடுதல், கைகுலுக்குதல், எச்சில் துப்புதல், புகைப்படித்தல் ஆகியவை தவிர்க்க வேண்டும்.

கொரோனா வைரஸ் என்பது சுவாசம் தொடர்பான நோய். இது மனிதர்களுக்கு சளி, இருமல், காய்ச்சல் மற்றும் மூச்சுத்திணறல் ஆகியவற்றை ஏற்படுத்தக் கூடிய ஒருவகை வைரஸ் கிருமியாகும்.


ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

MARRIAGE &
RE-MARRIAGE MATCHING CENTRE

Cell: 90805 54805, 99424 90217

Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 7.00 A.M - 9.00 A.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# அரசு அறிவிப்புகள்

## பேக்கிங் செய்யப்படாத பலகாரங்களுக்கு காலாவதி தேதி அவசியம்

இனிப்பு பலகாரங்களை விற்பனை செய்யும் கடைகள் இனி இனிப்புப் பொருட்களின் காலாவதி தேதியைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும் என்று இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆணையம் தெரிவித்துள்ளது.

பேக்கிங் செய்யப்படாமல் விற்கப்படும் இனிப்புகளின் தயாரிப்பு தேதி, தயாரிப்புப் பொருட்கள் உள்ளிட்ட விவரங்கள் அப்பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளில் குறிப்பிட வேண்டும் என்று உணவு பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. கடைகளில் விற்கப்படும் இனிப்புகளின் தரம் குறித்து பல்வேறு புகார்கள் வந்த நிலையில், உணவு பாதுகாப்பு ஆணையும் இந்த முடிவை எடுத்துள்ளது.

அதன்படி வரும் ஜுன் 1 முதல் இந்த புதிய நடைமுறையை கடைபிடிக்க வேண்டும் என்று உணவு வணிக செயல்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஏற்கனவே பேக்கிங் செய்யப்பட்டு விற்கப்படும் பொருட்களில் காலாவதி தேதி, தயாரிப்புப் பொருட்கள் உள்ளிட்ட விவரங்களை குறிப்பிட வேண்டும் என்று விதி உள்ளது.

இந்நிலையில் தற்போது பேக்கிங் செய்யப்படாமல் சில்லரையாக விற்கப்படும் இனிப்புகளுக்கும் அவ்விரங்கள் குறிப்பிட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடைகள், தொழிற்சாலைகளின் பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டும்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கடைகள், தொழிற்சாலைகள், பன்னாட்டு வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் பெயர்ப் பலகைகள் தமிழில் இருக்க வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அத

அதனடிப்படையில் பெயர்ப் பலகைகளில் முதலாவதாக தமிழ் 5 மடங்கும், இரண்டாவதாக ஆங்கிலம் 3 மடங்கும், மூன்றாவதாக பிற மொழிகள் 2 மடங்கும் என்ற அளவில் (5:3:2) அமைய வேண்டும் என அரசால் ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் ஆட்சித் தமிழில் அமைக்க சேம்பர் அங்கத்தினர்கள் அனைவருக்கும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## GST கேள்வி-பதில்

**கேள்வி:** GST சட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி அன்று Invoice என்பது Sl. No. 1- ல் தான் தொடங்க வேண்டும். முந்தைய ஆண்டின் தொடர்ச்சியாக இருக்கக் கூடாதென்று கூறப்பட்டுள்ளது. சரியா?

**பதில்:** தவறு. GST சட்ட விதிமுறைகளில் இது போல் இல்லை. ஆனால் Sl.No. I-ல் தொடங்குவது வியாபாரத்தில் ஒரு ஒழுங்கு முறையை கொடுக்கும்.

**கேள்வி:** Input Tax Credit எடுக்கப்பட்ட வியாபார சொத்துக்கள் (Business Assets) தொகை பெறப்படாமல் (Without Consideration) விற்கப்பட்டாலும் அதற்கு GST வருமென்று கூறுகிறார்கள். சரியா?

**பதில்:** சரியே. ஆனால் ITC எடுக்கப்பட்டாலும் Transfer of going concern என்று வியாபாரம் நடைபெறும் நிலையில் முழுமையாக அல்லது பகுதியாக விற்கப்படும் வியாபாரத்திற்கு GST வரியில்லை.


சுபமுகூர்த்தப் பட்டு சேலைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்
SRB சில்க்ஸ்
158, தெற்கு மாசி வீதி, மதுரை - 1.
Ph : 2320536

வாடிக்கையாளர்களின் சேவையில் 100 ஆண்டுகள் SRB சில்க்ஸ் Since 1901
ஸ்தாபிதம் 1901

ஆடவர் மற்றும் பெண்களுக்கான பிரத்யேக ஆடையகம்
SRB பொட்டிக் BOUTIQUE
158-A, தெற்கு மாசி வீதி, மதுரை-1. போன் : 4362111
135, 2வது கிழக்கு மெயின் ரோடு, அண்ணாநகர், மதுரை-20 போன் : 4961990

எமது சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பயன் பெறுங்கள்.

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




## PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrance Pvt. Ltd



K K Dinakaran

www.pandiansurfactants.com / www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831



## நூற்றாண்டு விழா கண்ட பள்ளீ

# நம் சமூகத்தினருக்கு கல்வி தந்த











# கெ[3]ண்டெ[3]ன் பொள்ட[3]ம் - ஒரு பார்வை

ஆன்மீகத் துறையில் ஓரளவு முதிர்ச்சி பெற்றவர்களும், தான தர்மங்கள் செய்வதில் ஆர்வம் கொண்டவர்களுமான திருவாளர்கள் கந்தாள்ளு. **சுந்தரராஜ பாகவதர்**, புளியடி. **முனி நாகேந்திர பாகவதர்**, கந்தாள்ளு. **லெக்ஷ்மண பாகவதர்**, மாணிக்கா. **சங்கர நாராயணய்யர்**, கெண்டே. **நன்னுசாமி பாகவதர்** ஆகிய ஐவர்கள் 1886-ம் ஆண்டில் கல்விக்குழு அமைத்துக் கொண்டு மதுரை நகரின் கிழக்குப்பகுதியில் உள்ள இராமநாதபுரம் சாலையில் (தற்போது காமராசர் சாலை என்று பெயரிடப்பட்டுள்ளது) இருந்து தொப்பே. பெல்லய்யர் சத்திரத்தில், கந்தாள்ளு. **ரெ. சுந்தரராஜபாகவதர்** தலைமையில் சௌராஷ்ட்ர துவக்கப்பள்ளியை துவக்கினர்.

ஆரம்பத்தில், அக்கம் பக்கங்களிலுள்ள சிறுவர்களை அன்புடன் கல்வி கற்க அழைத்தும், அபிமானிகளிடமிருந்து மேஜை, நாற்காலி முதலியவைகளை அன்பளிப்பாகப் பெற்றும் அப்பள்ளியை ஆரம்பித்தார்கள்.

தொடக்கக் கல்வியை ஸௌராஷ்ட்ர சமூகத்தில் பரப்புவதை ஒரு தெய்வீகத் தொண்டாக எண்ணிப் பணி புரிந்தவர்களில் முன்னணியில் நின்றவர் உயர்திரு. கெண்டே. **கே.எஸ்.பி. நன்னுசாமி பாகவதர்** ஆவார். இப்பெரியவர் சமூக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய முன்னோர்கள் ஜரிகை வியாபாரம் செய்து வந்தவர்களாகக் கூறப்படுகிறது. ஏழை நெசவாளர்கள் பல சமயங்களில் பசிக் கொடுமையால் பணம் தேவைப்பட்டு இரவு நேரங்களில் எந்நேரத்திலும் வீட்டுக் கதவைத் தட்டி பணம் கேட்டால் இவர் சற்றும் தயங்காமல் வந்தவர்களுக்குத் தேவைப்படும் பணத்தை கொடுத்து வந்துள்ளனர்.

ஆண்கள் மட்டுமின்றி பெண் குழந்தைகளும் ஆரம்பக் கல்வி பெற வேண்டுமென்பதில் அதிக ஆர்வம் காட்டி வந்தார். எனவே அந்தக் காலத்தில் இவர் தன்னுடைய குதிரை வண்டியில் சென்று பெண் குழந்தைகளை ஏற்றிக்கொண்டு பள்ளிக்கு அழைத்து வருவாராம். இவருடைய நல்லாதரவில் பெண்களுக்கான பள்ளி தெற்கு மாசி வீதியிலுள்ள, ஜுட்டி பங்காளிச் சகோரர்களுக்கும் பாத்தியமான, திரௌபதி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

பின்னர் 1890-ம் ஆண்டில் கெண்டே. **கே.எஸ்.பி. நன்னுசாமி பாகவதர்** தமது சொந்த கட்டிடத்தை, சௌராஷ்ட்ர துவக்கப்பள்ளி அவ்விடத்தில் நிலையாக நடைபெற நன்கொடையாக வழங்கினார். இத்துவக்கப் பள்ளியை **கெண்டென் பொள்டம்** என்று சௌராஷ்ட்ர சமூக மக்கள் இன்றளவும் சிறப்பாக அழைத்து வருகின்றனர்.


பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை பெருகவே, தெற்குமாசி வீதியில், திருமலை நாயக்கர் மன்னரின் இசைமன்றமாக விளங்கிய நவபத்கானா எனும் பழைய கட்டிடத்தை அன்றைய ஆங்கிலேய அரசிடமிருந்து ஐயாயிரம் ரூபாய் விலைக்கு வாங்கி, 1892-ம் ஆண்டு அவ்விடத்தில் புதிய துவக்கப்பள்ளி தொடங்கப்பட்டது. 1895-ம் ஆண்டு முதல் இப்பள்ளியின் நிர்வாகப் பொறுப்பு மதுரை சௌராஷ்ட்ர சபையின் கீழ் வந்தது.

1898-ம் ஆண்டில் இந்த துவக்கப்பள்ளி இடைநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டது. 1900-ம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்ந்தது.

# இப் பள்ளியின் ஸ்தாபகர்கள்



கெண்டே. K.S.B. நன்னுசாமி பாகவதர்



கெண்டே. K.S. சுந்தர்ராஜ பாகவதர்

இவ்வுயர்வுக்கு காரணமாக விளங்கியவர்களில் புளியடி. **முனிநாகேந்திர பாகவதர்**, மாணிக்கா. **இராம. சங்கர நாராயணய்யர்**, கந்தாள்ளு. **வெ. இலட்சுமணய்யர்**, கெண்டே. **கே.எஸ்.பி. நன்னுசாமி பாகவதர்**, **கே.எஸ். சேஷய்ய பாகவதர்** குறிப்பிடத் தகுந்தவர்கள்.

1900-ல் பள்ளியின் நிர்வாகக்குழு, மதுரை சௌராஷ்ட்ர சபையினரால் நியமிக்கப்பட்ட கே.டி. இலக்குமண பாகவதர் செயலாளராக கொண்ட, **எல்.கே. துளசிராம், கே.வி. இராமாச்சாரி, கே.எஸ்.பி. நன்னுசாமி பாகவதர், என்.கே. இராமலிங்கய்யர்** ஆகியர்வகள் கொண்ட நிர்வாகக்குழு 1900-ம் ஆண்டு முதல் பள்ளியின் நிர்வாகத்தை திறம்பட நடத்தினர்.

**உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்வு :**

மாணவர்களின் எண்ணிக்கை உயரவே இடப்பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால், 1901-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில் மேங்காட்டுப் பொட்டல், எட்வர்டு பூங்கா (இன்றைய ஜான்சிராணி பூங்கா) (நியூ சினிமா திரையரங்கு) அருகில் இருந்த கட்டிடத்தை, அருளம்மாள் அந்தோணியிடமிருந்து ரூபாய் ஐயாயிரத்து அறுநூறுக்கு வாங்கி, நவபத்கானாவில் இருந்த பள்ளியை புதிய கட்டிடத்திற்கு மாற்றினர். நவபத்கானாவில் இருந்த கட்டிடம் கிளைப் பள்ளியாக செயல்பட்டது. 1903-ம் ஆண்டு முதல் இப்பள்ளி முழு அளவில் உயர்நிலைப்பள்ளியாக தகுதி பெற்றது. பின் அரசின் தற்காலிக தகுதி இப்பள்ளிக்கு கிடைத்த பின்பு, 1904-ம் ஆண்டில் முதன்முதலாக மாணவர்கள் பள்ளி இறுதித் தேர்வான மெட்ரிக்குலேசன் தேர்வுக்கு அனுப்பப்பட்டனர்.

**பள்ளி கல்விக்குழு :**

உயர்நிலைப்பள்ளியின் தேவைகள் தொடர்ந்து பெருகப் பெருக, சிக்கலான நேரங்களில் நிலைமையை சமாளிக்க 1906-ல் பத்து பேர் கொண்ட கல்விக்குழு அமைக்கப்பட்டது. பள்ளிக் கல்விக்குழுவின் மேலாளராக ராஷ்ட்ரபந்து ஸ்ரீ. எல்.கே. துளசிராம் மற்றும் உறுப்பினர்களாக திரு. **கே.வி. இராமாச்சாரி, கே.எஸ். சேஷய்ய பாகவதர், கே.டி. இலக்குமண பாகவதர், கே.எஸ்.பி. நன்னுசாமி பாகவதர், அல்லு. சொக்கய்யர், என்.கே. இராமலிங்கம், என்.எம்.ஆர். பாலுசாமி அய்யர், சி.எம். வெங்கடாசலபதி அய்யர், எஸ்.பி. நாகேசுவர அய்யர்** ஆகியவர்களின் நிர்வாகத்தில் பள்ளி செயல்பட்டது.

கெண்டே **K.S. விஷ்ணுவர்தன்**
**96555 85955**
கெண்டே **K.M. ஜெயந்தன்**
**90470 09101**

*Feeling Good Is Second Nature*

# Lissy®

- Bra
- Panty
- Slips

*All Women Love*

Feeling Second Nature

*Manufacturer:*

## VGP APPARELS

Saikrupa Industrial Estate (Dinbandu)
Shop No: 10, Near Shivam Wafers, Opp. P.L. Lokhande Marg,
Chembur(W), Mumbai - 400 089
Ph: 022 - 2525234, Cell: 89760 10072

**ஜெய்கங்கா அப்பேரல்ஸ்**
279, கீழ மாசி வீதி
விளக்குத்தூண் அருகில்
மதுரை – 1
செல்: 94430 21910

**P.G. India**
50, தெற்கு மாசி வீதி
லலிதா ஜுவல்லரில் எதிரில்
மதுரை – 1
செல்: 84382 71065

**வெங்கடேஸ்வரா**
**டெக்ஸ் & கிட்ஸ் வியர்**
32, மஹால் 5வது தெரு
மதுரை – 1
செல்: 99650 40168

# செல்லிடப்பேசிகளால் கண் பாதிப்புக்குள்ளாகும் மாணவர்கள் அதிகரிப்பு!;

*மருத்துவர்கள் தகவல்*



செல்லிடப்பேசி, கணினி பயன்பாட்டால் கண் பார்வை பாதிப்புக்குள்ளாகும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, கண் சோர்வு, உலா விழி பாதிப்பு உள்ளிட்ட பிரச்சனைகளை 50 சதவீதத்துக்கும் அதிகமான மாணவர்கள் எதிர்கொண்டு வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளாக செல்லிடப்பேசி மற்றும் கணினியின் பயன்பாடு பல மடங்குகள் அதிகரித்துவிட்டன. குறிப்பாக வளரிளம் பருவத்தினர் அதிக அளவில் செல்லிடப்பேசிகளை உபயோகித்து வருகின்றனர்.

இந்தியாவைப் பொருத்தவரை ஏறத்தாழ 95 சதவீத இளைஞர்கள் செல்லிடப்பேசி மற்றும் கணினியில்தான் அதிக நேரம் செலவிடுவதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் வாயிலாக தகவல் - தொடர்பு மேம்பட்டிருப்பது உண்மை என்றாலும், மறுபுறம் பல்வேறு எதிர்வினைகளும் ஏற்பட்டிருப்பதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக, கண் நலன் மற்றும் மன நலன் பாதிப்புகளுக்கு செல்லிடப்பேசிகளும், கணினியும் வழிவகுப்பதாக அவர்கள் கூறுகின்றனர். அதிலும், பள்ளி, கல்லூரி மாணவர்கள் அத்தகைய பாதிப்புகளுக்கு அதிகமாக ஆளாவதாகத் தெரிகிறது.

அதை உறுதிபடுத்தும் விதமாக அண்மைக்காலமாக பார்வைக் குறைபாடுகளால் பாதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 50 சதவீதம் அதிகரித்திருப்பது மருத்துவத் தரவுகளில் தெரியவந்துள்ளது. இதுகுறித்து டாக்டர் அகர்வால்ஸ் மருத்துவமனையின் மூத்த மருத்துவர் டாக்டர் கலாதேவி சதீஷ் கூறியதாவது;

பகலில் மட்டுமின்றி இரவிலும் கண் விழித்து செல்லிடப்பேசிகளிலும், கணினியிலும் நேரத்தை செலவிடும் போக்கு அதிகரித்து வருகிறது. தொடர்ந்து அவ்வாறு டிஜிட்டல் திரைகளைப் பார்ப்பதால் கண் பாதிப்பு நேரிடும். குறிப்பாக, கண் அழுத்த பாதிப்புகளுக்கு அது வழிவகுக்கும். அத்தகைய பாதிப்பு ஏற்பட்டால், கண்கள் வடு எரிச்சல் ஏற்படும். மங்கலான பார்வை, கவனக் குறைபாடு உள்ளிட்டவற்றுக்கும் அது வித்திடும். அதனுடன், தலைவலி, கழுத்து, தோள்பட்டை வலி மற்றும் தூக்கப் பிரச்னைகளும் ஏற்படக்கூடும். இதுபோன்ற பாதிப்புகளை எதிர்கொண்டு சிகிச்சைக்கு வரும் பள்ளி, கல்லூரி மாணவர்களை தற்போது அதிகமாகப் பார்க்க முடிகிறது. அதுமட்டுமின்றி கணினி சார்ந்த கண் நோய்கள் எனப்படும் சில பிரச்னைகளாலும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால், மிக சிறிய வயதிலேயே பார்வைத் திறன் குறையும். இதுகுறித்து உரிய விழிப்புணர்வு அவசியம்.


அதற்காக செல்லிடப்பேசியையோ அல்லது கணினியையோ பயன்படுத்தக் கூடாது என்று அர்த்தமில்லை. அவற்றை பாதுகாப்பாக எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைத்தான் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.


கணினி, செல்லிடப்பேசிகளை பயன்படுத்துகிறபோது உரிய கால அளவுகளில் கண்களுக்கு ஓய்வளிக்க வேண்டும். 20-20-20 என்ற விதிப்படி அவற்றை பயன்படுத்தினால் கண் பாதிப்புகளில் இருந்து தவிர்க்கலாம். அதாவது, செல்லிடப்பேசிகள், கணினியை பயன்படுத்தும்போது 20 நிமிடங்களுக்கு ஒருமுறை அதில் இருந்து பார்வையை விலக்கி 20 அடி தொலைவில் உள்ள ஓரிடத்தை 20 விநாடிகள் பார்க்க வேண்டும். இதன் மூலம் டிஜிட்டல் திரையைத் தொடர்ந்து பார்ப்பதனால் ஏற்படும் கண் பாதிப்புகள் குறைக்க முடியும்.

மேலும், குறிப்பிட்ட கால இடைவெளிக்கு ஒருமுறை கண்களை மூடித்திறக்க வேண்டும். கண்களை இமைக்க வேண்டும். இதைத்தவிர, ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம், இரவில் கண்விழிக்காமல் குறைந்தது 7 மணி நேரம் தூங்குதல் ஆகியவையும் கண்களை பாதுகாப்பதற்கான வழிமுறைகளாகும் என்கிறார் அவர். - தினமணி


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்





ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்

98430 72626
98425 72626

- செங்கல்
- மணல்
- ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
- கிராவல்
- கிரஷர் தூசி
- சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
- உடைகல்

No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை - 9



# சைவ இறைச்சி!

நமது சௌராஷ்ட்ர சமூக மக்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் வரை மாமிசங்களை உண்பது கிடையாது. நாளடைவில் சிறிது சிறிதாக மாமிசங்களை உண்ணும் பழக்கத்திற்கு மாறிவிட்டனர். இன்று, சிறு தானிய உணவுகள், இயற்கை உணவுகளுக்கு பலர் மாற விரும்புகின்றனர். மருத்துவர்கள், ஆன்மிக வாதிகள் அசைவ உணவுகளை தவிர்ப்பது நலம் என்றே கூறுகின்றனர். அசைவ உணவிலிருந்து விடுபட நினைப்பார்கள். ஆனால் மாற முடியாமல் தவிப்பார்கள். அவர்களுக்காகவே வந்துவிட்டது சைவ இறைச்சி.

ஆமாம் சார். கவலையை விடுங்கள். எப்போதும், நினைத்த நேரமெல்லாம் பிடித்த கறியை நீங்கள் சாப்பிட முடியும். உங்களுக்குப் பிடித்தது என்ன? கோழிக் கறியா, ஆட்டுக்கறியா? இல்லை வெஜிடேரியன் ஆட்டுக்கறியா?. இதில் எதை வேண்டுமானாலும் நீங்கள் சாப்பிட முடியும்? என்னடா இது புதுக் கதையாக இருக்கிறது என்றா எண்ணுகிறீர்களா?

மனிதர்களின் தினசரி வாழ்க்கைக்கு தேவைப்படும் முக்கியமான சத்துக்கள் மூன்று என்கிறது மருத்துவ அறிவுரை. அவை கார்போ ஹைட்ரேட், புரதம், கொழுப்பு என்பவை. சீரான உணவுமுறை என்பது கீழ்க்கண்ட விகிதாச்சாரத்தில் அமைய வேண்டும்.

அதாவது உங்கள் உணவின் பெரும் பகுதி புரதசத்து தருவதாக இருக்க வேண்டும். மேற்கண்ட இந்த குறிப்பின்படி நீங்கள் புரத உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சீரான உணவு முறை என்ற கணக்கில் நீங்கள் அரிசிச் சோறு சாப்பிடுமளவு சிக்கனும், சிக்கன் சாப்பிடுமளவு சிக்கனமாக அரிசிச் சோறும் சாப்பிட்டால் அது உடலுக்குப் போதுமானது. நாம் சாப்பிடும் புரதமானது நம் உடலின் திசுக்கள் வளரவும் மூளை ஆற்றல் பெருகவும் உதவுகிறது.


செடியைத் தின்றுதான் கால்நடைகள் புரதத்தை உருவாக்குகிறது. இந்த ஐடியாதான செடிகளிலிருந்து பெறப்படும் செயற்கைப் புரதத்தின் சூத்திரம். இதில் இன்று உலகின் பல நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. முக்கியமாக உலகின் நம்பர்-2 பணக்காரர்கள் எனப்படும் பில்கேட்ஸ் இதில் பல கோடிகளை முதலீடு செய்திருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.


## சைவ உணவு சாப்பிடுபவர்களுக்கு இருதய நோய் அபாயம் குறைவு!

மாமிச உணவுகளைக் குறைத்து, தாவர உணவுகளை அதிக அளவில் உட்கொள்பவர்களுக்கு இருதய நோய்கள் ஏற்படுவதற்கான அபாயம் குறைவாக உள்ளதாக அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் அய்வில் தெரிய வந்துள்ளன. இது குறித்து அந்த நாட்டின் துலானே பல்கலைக்கழக ஆய்வாளர்கள் உள்ளிட்டோர் நடத்திய அந்த ஆய்வின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாம் உண்ணும் உணவிலுள்ள கொழப்புகளை உடலில் கலக்காமல் தடுப்பதில், நமது ஜீரணப் பாதையில் உள்ள பாக்டீரியாக்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அசைவ உணவுகளை உண்பதற்குப் பதில், தாவர உணவுகளை உட்கொள்வதன் மூலம், அந்த பாக்டீரியாக்களின் செயல்திறனை மேம்படுத்துகிறது. இதன் காரணமாக, உடலில் கொழுப்பு சேர்வது குறைவதால், இருதய நோய்கள் ஏற்படும் அபாயம் குறைகிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டள்ளது.

அதாவது செடிகள், காய்கறிகள் கொஞ்சம் ரசாயனங்களின் உதவியுடன் பின்வரும் இறைச்சிகள் உருவாக்கப்படுகின்றன. ஆடு, மாடு, கோழிக்கறியின் சுவையை செயற்கையாக மேற்கண்ட கலவையில் உருவாக்கி விட முடியும்.

மாமிசத்தை சாப்பிட என்னென்ன செயல் முறைகளை கடைபிடிக்கிறோம்? மாமிசத்தில் உள்ள சர்க்கரை, கொழுப்பு, மற்ற பிற அமினோ அமிலங்கள் போன்றவை கொதி சூட்டில் பிரியும். அப்படி பிரியும் போது அதிலிருந்து பலவித இரசாயனங்களை அது





உருவாக்கும். அதை மில்லர்ட் ரியாக்ஷன் என்று அழைப்பார்கள். இந்த குணம், பதம்தான் கறியை இளகச் செய்கிறது. இப்படிப்பட்ட புதிய வகை ரசாயனங்களின் கூட்டானது நாம் சேர்ந்த எண்ணெய், காரம் போன்றவைகளோடு கலந்து நம் நாவில் படும்போது பல சுவைகளை உணரச் செய்கிறது. இளகிய கறியும் திரியாக, ஜவ்வுகளாக நாவில் நின்று இறங்குகையில் மாமிசம் தின்ற உணர்வு நமக்கு ஏற்படும்.

**செயற்கை மாமிசம்:** செயற்கை மாமிசத்தை உருவாக்க, அதாவது ஆடு, பன்றி, மாட்டுக்கறி போலவே அது இருக்க கீழ்க்கண்ட மூலப்பொருள்கள்.

தேவை. சோயா, பீன்ஸ், பயிற்றம்பருப்பு, பச்சைப்பட்டானி, அரிசி போன்றவற்றை மசிக்கிறார்கள். அப்படி அதிலிருந்து எடுக்கும் புரதங்களுடன் தேங்காய் எண்ணெய், கோகோ எண்ணெய், கடலை எண்ணெய் போன்றவற்றை கலந்து கறியை உருவாக்குகிறார்கள். இன்னும் உங்களுக்கு செயற்கை மாமிசத்தில் சந்தேகம் உண்டல்லவா? இதோ அதற்கான பதில், பீட்ரூட் சாறு சேர்த்து விட்டால் கண்ணுக்கு சிவப்பான கறி உருவாகிவிடும்.

கோழிக்கறிக்கான பார்முலாவும் உண்டு. எந்தக் கறி உங்களுக்குத் தேவையோ அதனை தயாரித்துக் கொடுத்துவிடுவார்கள். நாள், கிழமைகள் எல்லாம் பார்க்கத்தேவையில்லை. மைக்ரோ பயாலஜி தெரிந்தவர்களுக்குப் புரியும். நாம் உண்ணும் செடிகளில் கூட மைக்ரோ உயிரினங்கள் வாழ்கின்றன. செடிக்கும் உணர்வுகள் உண்டு என்கிறது ஆய்வு.

**மேற்கண்ட இந்த செயற்கை மாமிசத்தில் துளியளவு கூட கவுச்சி எனப்படும் குணம் இல்லை.** குறிப்பாக இவ்வகை புரதங்களை தயாரிக்கும் போது சில, பல பாக்டீரியாக்களும் அதில் கலக்க வேண்டி வரும். மாமிசத்துக்கு இறைச்சித் தன்மையை கொடுக்கும் சில உயிரனங்களே புரதம் உருவாகவும் காரணமாகிறது. செடிகளில் புரதம் வரவும் சில வகை நுண்ணுயிர்களே காரணம். இதன் காரணமாக வெஜிடேரியன் இறைச்சியில் சிலவகை நுண்ணுயிரிகள் சேர்க்கப்படுகின்றன. அது எப்படி என்றால் இட்லி மாவில் ஈஸ்ட் பாக்டீரியா இருக்கிறதல்லவா? அது போல.

சுற்றுச்சூழலுக்கு கேடு இல்லாத செயற்கை மாமிசம் சைவப் பிரியர்கள், சூழலியலாளர்கள் போன்ற பலராலும் பாராட்டப்படுவதால் சந்தையில் இதற்கு வரவேற்பும் அதிகம்.

*-ttupublications / தொகுப்பு: இதழ் குழு*

# மருத்துவத் தகவல்

**கேள்வி:** எ66 வயதான பெண்மணி நான், இரண்டு முழங்கை மூட்டிலும் தோள்பட்டையிலும் வலி உள்ளது. அவ்வப்போது வீக்கமும் ஏற்படுகிறது. பல நாட்டு மருந்துகள் எடுத்துக் கொண்டும் குணமாகவில்லை. எனது நண்பர் உருளைக்கிழங்கு சாப்பிடுவதால் இந்த வலி உண்டாகிறது என்று கூறுகிறார். உருளைக்கிழங்கு சாப்பிட்டால் முழங்கை வலி வருமா?

**பதில்:** கஉருளைக்கிழங்கு சாப்பிட்டால் முழங்கை வலி வராது. முழங்கை வலிக்கும் உங்கள் உணவிற்கும் எந்தவித நேரடி தொடர்பும் இல்லை. உங்கள் முழங்கை வலியின் அடிப்படை காரணம் என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு நீங்கள் மூட்டு நோய்களுக்கு உண்டான இரத்த பரிசோதனைகள் மற்றும் X-Ray எடுக்க வேண்டி இருக்கும். நீங்கள் ஒரு எழும்பு மூட்டு மருத்துவரை சந்தித்து ஆலோசனை செய்வது நன்று.

– டாக்டர் K.N. சுப்பிரமணியன்,
வேல்ஸ் ஸ்பெசாலிட்டி ஆர்த்தோ க்ளினிக்
93442 46436

# GST கேள்வி–பதில்

**கேள்வி:** Input Tax Credit எடுக்கப்பட்ட வியாபார சொத்துக்கள் (Business Assets) தொகை பெறப்படாமல் (Without Consideration) விற்கப்பட்டாலும் அதற்கு GST வருமென்று கூறுகிறார்கள். சரியா?

**பதில்:** சரியே. ஆனால் ITC எடுக்கப்பட்டாலும் Transfer of going concern என்று வியாபாரம் நடைபெறும் நிலையில் முழுமையாக அல்லது பகுதியாக விற்கப்படும் வியாபாரத்திற்கு GST வரியில்லை.

**கேள்வி:** GST சட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி அன்று Invoice என்பது Sl. No. 1- ல் தான் தொடங்க வேண்டும். முந்தைய ஆண்டின் தொடர்ச்சியாக இருக்கக் கூடாதென்று கூறப்பட்டுள்ளது. சரியா?

**பதில்:** தவறு. GST சட்ட விதிமுறைகளில் இது போல் இல்லை. ஆனால் Sl.No. I-ல் தொடங்குவது வியாபாரத்தில் ஒரு ஒழுங்கு முறையை கொடுக்கும்.

*- நீதி அமிர்தம்*



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633




# தூக்கம்

நீங்கள் இரவில் தூங்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் கண்கள், காதுகள், மூக்கு மற்றும் தோலின் கீழுள்ள நரம்புகளுடன் இணைக்கப்படுள்ள உணர்ச்சி நரம்புகளின் வாயிலாக தொடர்ந்து பதிவுகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.

தூங்கும் போது நமது ஆன்மா நம் உயர்நிலையுடன் இணைக்கப்பட்டு. கடவுள்களின் ஞானத்திலும் முன்னறிவிலும் பங்கேற்கிறது. இதுவே நாம் தூங்குவதற்கு முக்கியக் காரணம்.

தூக்கமின்மை உங்களை எரிச்சலடையச் செய்யும். சிடுசிடுப்பாக்கும், மனச்சோர்வை ஏற்படுத்தும். ஆரோக்கியமாக இருப்பதற்கு எல்லா மனிதர்களுக்கும் குறைந்தபட்சம் ஆறு மணிநேரம் முதல் எட்டு மணிநேரம் வரை தூக்கம் அவசியம். குறைவான தூக்கத்தில் ஓட்டி விடலாம் என்று நினைப்பவர்கள் தங்களையே முட்டாளாக்கிக்கொள்கிறார்கள்.

மனநோய் ஏற்படுவதற்கு முன் சிலருக்குத் தீவிரமான உறக்கமின்மை ஏற்பட்டிருந்ததை தூக்கச் செயல்முறைகள் மற்றும் தூக்கமின்மை குறித்து ஆராய்ந்துள்ள மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தூக்கத்தின் போது நீங்கள் ஆன்மீக ரீதியாக தூண்டப்படுகிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சோர்ந்து போன ஒரு மூளை, மிகுந்த பசியுடன் உறக்கத்திற்காக ஆவலாய் காத்திருக்கும். அதைப் பெறுவதற்காக எதையும் தியாகம் செய்யும் என்பதை ஆர்வலர்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் காட்டியுள்ளன.

வெறும் ஒரு மணி நேர உறக்க இழப்புக்குப்பின்னர் கண நேர கண்ணயர்ச்சி அல்லது கோழி தூக்கம் என்றும் சிறுதூக்கம் அனுபவிக்க துவங்குவர். இது ஒரு மணி நேரத்திற்கு 3 அல்லது 4 முறை ஏற்படும். அவற்றின் போது உண்மையான உறக்கத்தில் இருப்பதைப்போல, அவருடைய கண் இமைகள் மூடிக்கொள்ளும். அவரது மூளை அலைகள் மெதுவாகச் செயல்படும்.

எரிச்சல்களாலும், சச்சரவுகளாளும் நீங்கள் அல்லலுற்றிருந்தால் உங்கள் மனத்தின் ஓட்டத்தைப் பிடித்து நிறுத்தி, உங்களுக்கு செயல்விடை அளிக்கக் காத்துக் கொண்டிருக்கும் உங்கள் ஆழ்மனத்தின் உறைந்துள்ள ஞானத்தையும் பேரறிவையும் பற்றிச் சிந்தியுங்கள்.

மன அமைதிக்கும், ஆரோக்கியமான உடலுக்கும் உறக்கம் அவசியம். தூக்கமின்மையால் எரிச்சல், மனத்தளர்ச்சி, மனக்கோளாறுகள் ஆகியவை ஏற்படும்.

உங்களுக்கு எட்டு மணி நேர உறக்கம் தேவை. வாழ்வில் பெரும் மகிழ்ச்சியோடும், வலிமையோடும் இருப்பதற்கு போதுமான தூக்கம் இன்றியமையாதது.

நன்றாகவும், முறையாகவும் தூங்கி நமது உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தார்கள் அனைவரும் என்றென்றும் ஆனந்தமாய், வெற்றிகரமான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று சேம்பர் வாழ்த்துகிறது. - S.S. ராம்சுந்தர்


## Statement about Ownership and other particulars of LAABH SAMACHAR, (Monthly) Madurai as required under rule 8 of the Registration of Newspapers(central) Rules, 1956

### Form IV (See Rule 8)

| | | |
|---|---|---|
| Place of Publication | - | Madurai |
| Periodicity of its Puclication | - | Monthly |
| Printer's Name | - | K.R. Ramalingam |
| Nationality | - | Indian |
| Address | - | No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 1, Tamilnadu. |
| Publisher's Name | - | K.K. Gnana Prabhakaran |
| Nationality | - | Indian |
| Address | - | 5A, Pankajam Colony 3rd Cross Street, Madurai Tamilnadu. |
| Name and Address of Publication of own the newspaper & Partners or share holders holding more than one percent of the total capital. | - | Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, II Floor, Madurai - 1. Tamilnadu. |

I, K.K. Gnana Prabhakaran, hereby declare that the particulars give above are true to the best of my knowledge and belief.

Date: 01.03.2020 K.K. Gnana Prabhakaran




Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder • Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

# தமிழக அரசு தொழில் துறைக்கான தனித்த கொள்கைகள்

- தினமணி

தொழில் துறையில் ஒவ்வொரு பிரிவும் தமிழக அரசின் தனித்த கொள்கைளால் சிறப்பாக அடையாளம் காட்டப்பட்டு வருகின்றன. இதனால் இத்துறையில் தமிழகத்துக்கு சாதகமான அம்சங்கள் இருக்கின்றன. நிகழாண்டில் மட்டும் 4-க்கும் மேற்பட்ட தொழிற்பிரிவுகளுக்கு தனிக் கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

நாட்டிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளும், தொழிலாளர்களும் நிறைந்த மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த 2004-05ம் நிதியாண்டு முதல் 2016-17ம் நிதியாண்டு வரையில் 9 சதவீதத்துக்கு உள்ளேயே இருந்து வந்தது. தற்போது அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் நாட்டில் உள்ள மாநிலங்களில் தமிழகம் மூன்றாவதாக விளங்குகிறது.

ஒட்டுமொத்த ஆட்டோமொபைல் உற்பத்தித் துறையில் நாட்டிலேயே தமிழகம் 25 சதவீத பங்களிப்பை அளித்து வருகிறது. ஃபோர்டு, ஹூண்டாய், மிட்சுபிசி, டெய்ல்மா, நிசான், ரினால்ட்,பி.எம்.டபிள்யூ போன்ற முன்னணி வாகன உற்பத்தி நிறுவனங்களை தமிழகம் ஈர்த்துள்ளது. மேலும், 350க்கும் மேற்பட்ட ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் விரும்பக்கூடிய மாநிலமாகவும் தமிழகம் உள்ளது.

**தமிழ்நாடு வானூர்தி மற்றும் ராணுவ தளவாட உற்பத்திக் கொள்கை:** வானூர்தி பொறியியல், வடிவமைப்பு, உற்பத்தி, மிகச்சிறந்த மனித வளம் ஆகியவற்றில் தமிழ்நாடு விரும்பத்தக்க மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. இதையடுத்து வானூர்தி மற்றும் ராணுவ தளவாட உற்பத்தியில் தனித்துவத்தை தமிழகம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வானூர்தி மற்றும் ராணுவ தளவாட உற்பத்தித் துறையில் அடுத்த 5 ஆண்டுகளில் 5 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீட்டை ஈர்ப்பதற்கு வானூர்தி மற்றும் ராணுவ தளவாட உற்பத்திக் கொள்கை வகை செய்கிறது. இதன்மூலம், அடுத்த 10 ஆண்டுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும்.



ஆட்டோமொபைல் நிறுவனங்களுடன், ராணுவ தளவாட உற்பத்தி ஆலைகளும் தமிழகத்தில் தழைத்தோங்கி வளர்ந்துள்ளன. ஆவடியில் உள்ள கனரக வாகனங்கள் உற்பத்தி ஆலை, ஆவடி ராணுவ ஆடைகள் தயாரிப்பு ஆலை, என்ஜின்கள் உற்பத்தி, திருச்சி ராணுவ தளவட உற்பத்தி ஆலை என இயல்பாகவே ராணுவ தளவாட உற்பத்தி ஆலைகளை தமிழகம் தன்னகத்தே கொண்டிருக்கிறது. இதனால், ராணுவ தளவாட உற்பத்தி மற்றும் வானூர்தி உபகரணங்களை தயாரிக்கும் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் வகையில் தனித்த கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வானூர்தி மற்றும் ராணுவ தளவாட உற்பத்தியை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு மின்சார கட்டணத்தில் இருந்து முற்றிலும் விலக்கு அளிப்பதுடன், பத்திரப்ப பதிவு போன்றவற்றில் இருந்து சலுகைகள் அளிக்கப்படும்.



**தமிழ்நாடு சூரிய மின்சக்தி கொள்கை:** தமிழகத்தில் தொழிற்சாலைகள் பெருகப் பெருக அவற்றுக்கான மின்சக்தி தேவையும் அதிகரிக்கின்றன. இதைக் கருத்தில்கொண்டு, வழக்கமான நடைமுறைகளில் இருந்து மாறுபட்டு மரபுசாரா அம்சங்களில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக



தமிழ்நாடு மின்சக்தி கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் வரும் 2023-ம் ஆண்டுக்குள் 9 ஆயிரம் மெகாவாட் அளவுக்கு சூரியமின் சக்திக்கான நிறுவு திறனை ஏற்படுத்துவது என கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் கொள்கை:** வேளாண் பொருள்களை பதப்படுத்தும் துறையில் தமிழகம் முன்னணி மாநிலமாக விளங்குகிறது. சிறு மற்றும் குறு தொழில்கள் பிரிவின் கீழ் வேளாண் பொருள்களை பதப்படுத்தும் 24 ஆயிரம் தொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நடுத்தர மற்றும் அதற்கும் அதிகமான தொழில் நிறுவனங்களாக ஆயிரத்துக்கும் மேற்பட்டவை உள்ளன. நாட்டின் மொத்த உணவு பதப்படுத்தும் பணியில் தமிழகம் 7 சதவீத பங்கினை அளிக்கிறது.




தமிழகம் 120 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களையும், 140 லட்சம் மெட்ரிக் டன் பழங்கள், காய்கறிகளையும் உற்பத்தி செய்கிறது. ஆண்டுக்கு 77.42 லட்சம் மெட்ரிக் டன் பாலையும் உற்பத்தி செய்து அளிக்கிறது. இந்தியாவிலேயே மீன் பிடித்தல் மற்றும் உற்பத்தியில் தமிழகம் நான்காவது இடத்தை வகிக்கிறது.

எனவே, இத்தகைய தன்மை கொண்ட மாநிலத்தில் உணவுப் பொருள்கள் வீணாகாமல் இருப்பதைத் தடுக்க தனித்த கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையின் அடிப்படையில் சிறு உணவுப் பூங்காக்கள், மெகா உணவுப் பூங்காக்கள், அல்ட்ரா மெகா உணவுப் பூங்காக்கள் போன்றவை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. இதுபோன்ற பூங்காக்கள் உணவு பதப்படுத்தும் ஆலைகளை அமைக்க முன்வரும் நிறுவனங்களுக்குச் சலுகைகளை அளிக்க கொள்கையில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அதாவது, மின்சார கட்டணத்தில் இருந்து விலக்கு அளிப்பது, பத்திரப்பதிவில் சலுகை போன்ற பல்வேறு அம்சங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**மின்சார வாகனக் கொள்கை:** நிகழாண்டில் வெளியிடப்பட்ட மிக முக்கிய கொள்கைகளில் மின்சார வாகனக் கொள்கை முக்கியமானது. இந்தியாவிலேயே மின்சார வாகனத்துக்கென தனித்த கொள்கையை தமிழகம் வெளியிட்டுள்ளது. சுற்றுச்சூழலை பாதிக்கும், பெட்ரோல், டீசலில் இயங்கும் வாகனங்களுக்கு மாற்றாக மின்சார வாகனத்தை அறிமுகப்படுத்தும் வகையில் இந்தக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது.



மின்சாரத்தில் இயங்கும் இருசக்கர வாகனங்கள், ஆட்டோக்கள் வாங்குவோருக்கு 2022-ம் ஆண்டு வரை சாலை வரியில் இருந்து விலக்கு அளிக்கப்படும். மின்சார வாகனக் கொள்கை மூலமாக ரூ. 50 ஆயிரம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்படும். இதன்மூலம் 1.5 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என மின்சார வாகனக் கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிகழாண்டில் வெளியிடப்பட்ட தொழில் துறைக்கான தனித்த கொள்கைகள் மூலம் தமிழகத்தை முன்னேற்றப்பாதைக்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கைகளில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது.


Sowndarya Traders

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com



# இலவச மின்சாரமும், வருமானமும்



வருங்கால மனித வாழ்க்கை முழுக்க முழுக்க எரிசக்தியை நம்பியே இருக்கப்போகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. தற்போது உலக அளவில் மக்களால் பயன்படுத்தப்படுகின்ற பெட்ரோலியம், நிலக்கரி, இயற்கை எரிவாயு உள்ளிட்டவை இன்னும் சில காலத்துக்கு மட்டுமே கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஆனால் என்றைக்குமே அழியாத, சுற்றுச்சூழலுக்கு உகந்த வற்றாத சக்தியைத் தேட வேண்டிய கட்டாயத்தில் மனித குலம் உள்ளது. அதில் மிக முக்கியமான ஆற்றலாக சூரிய ஒளி ஆற்றல் முதலிடத்தில் உள்ளது.

இந்தியாவில் தற்போது நிலவிவரும் மின் பற்றாக்குறையை விட 2020-ம் ஆண்டு இரு மடங்கு அதிகமாக இருக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. இதற்கு தீர்வாக சூரியசக்தியிலிருந்து மின்சாரத்தைத் தயாரிப்பது மிக அவசியமாகிறது.

இந்தியாவில் ஆண்டுக்கு 250 முதல் 300 நாட்கள் வரை சுமார் 3 ஆயிரம் மணி நேரம் சூரிய ஒளி தடையின்றி கிடைக்கிறது. இதைக் கொண்டு 5 ஆயிரம் டிரில்லியன் கிலோ வாட் சூரிசக்தி அண்டு முழுவதும் தடையின்றி கிடைக்கும்.

சூரிய சக்தி மின்சக்தி தகடுகளின் (Photovoltaic Cells) ஆயுட்காலம் 25 ஆண்டுகள்.

சூரிய ஆற்றலை சேமிக்க ஹைட்ரஜன் செல் (Hydrogen Cell Technologies) தொழில்நுட்பம் வருங்காலங்களில் பெரும் பங்காற்றப்போகிறது. அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் அளிப்பது என்ற இலக்கை அடைவதற்கு சூரியத் தகட்டிலிருந்து மின்சாரம் (Panel to Power) மற்றும் "இந்தியாவில் உற்பத்தி" (Make in India) ஆகியவை மிகவும் முக்கியமானவை.

அடுத்த 4 ஆண்டுகளில் 7 ஆயிரம் கோடி டாலர் முதல் 80 ஆயிரம் கோடி டாலர் வரை இத்துறையில் வணிக வாய்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.


இந்தியாவில் சில ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் ஆகியவற்றில் இயங்கும் கார்களே இருக்காது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இச்சூழலில், பெட்ரோல் நிலையங்கள் போல, சோலார் மின்சக்தி நிலையங்கள் அமைக்கப்படும்.

ஒரு கிலோ வாட் சோலார் பவர் பேக் மூலம் தொடர்ந்து 16 மணி நேரம் மின்சாரம் பெற முடியும். இதற்கான சோலார் அமைப்பை ஏற்படுத்த ரூ. 2.2 லட்சம் செலவாகும்.

சோலார் அமைப்பை ஏற்படுத்த 65 சதுர அடி இடம் தேவை. இந்த நவீன சோலார் அமைப்பை ஏற்படுத்த விரும்புவோர், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி முகமை அலுவலகங்களில் விண்ணப்பித்து 50 சதவீதம் மானியம் பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்புவோர் www,teda.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கவும்.

- தினமணி

சிறந்த தையல் !
குறைந்த விலையில் !

நீடித்த உழைப்பு தரும் !!
ஒரே விலையில் !!

**ரேவதீஸ் டெக்ஸ்**

பள்ளி யூனிபார்ம்கள் / வேஷ்டி / பேண்ட் / ஆண்கள், பெண்கள் உள்ளாடைகள் கிடைக்கும்

1, கிருஷ்ணாபுரம் 1வது தெரு, கீழவாசல், காமராஜர் சாலை, அரசமரம் சமீபம், மதுரை – 625009
செல்: 99945 48607, K.G.N. ரமேஷ் – 95970 72223

# அடுத்த பத்தாண்டுகளில் வளர்ச்சி காணும் தொழில்கள்



அடுத்த பத்தாண்டுகளில் வளர்ச்சியை நோக்கி செல்லும் என்று கணிக்கப்பட்டிருப்பதில் கீழ்கண்ட தொழில்கள் உள்ளன.

அடைக்கப்பட்ட சுத்தமான காற்று, வாகன சார்ஜிங் நிலையங்கள் (பெட்ரோலுக்கான மாற்று) மனித டி.எம்.ஏ வடிவமைப்பு நிறவனங்கள் வருகின்றன. மேலும், ரோபோட்டிக் துறை, ஸ்டெம் செல் பார்மசி, வெர்டிக்கல் வேளாண்மைத் துறை, நீர் வர்த்தகம், ஓய்வு பெற்றவர்களுக்கான சேவைகள், சமூக ஊடக ஆலோசனைத் துறை, மாற்று மொழி பெயர்ப்பு சேவைகள், மாற்று எரிபொருட்களான சோலார், பயோ உள்ளிட்ட எரி பொருட்கள் வளர்ச்சித்துறை போன்றவை வரிசை கட்டுகின்றன.

இதைத் தொடர்ந்து, பவர் சேமிப்பு வணிகம், பெட்ரோல் மற்றும் டீசல் இல்லாமல் மாற்று எரிபொருட்களில் வாகன உற்பத்தித்துறை, காற்றாலை ஆற்றல் துறை, இயற்கை சார்ந்த ஆரோக்கியத்திற்கான துறைகள் இடம் பிடிக்கின்றன. இப்படியான வளர்ச்சிகள் குறித்துப் பேசும் பொருளாதார வல்லுநர்கள் இதில் முக்கியமான துறைகளாக விவசாயம் சார்ந்த உணவு உற்பத்தித் துறை என 50க்கும் மேற்பட்ட தொழில் துறைகளே அடுத்த பத்தாண்டுகளில் புதிய தொழில் நுட்பங்களின் மூலம் முக்கிய வளர்ச்சிப் பங்கை படிக்கும் என்கிறார்கள்.

இவ்வாறாக தொழில் நுட்பங்களை வளர்ச்சி பெறும் கால கட்டங்களில் அதற்கு முந்தைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி தொழில் செய்து வந்தவர்கள் வேலை வாய்ப்பினை இழக்கிறார். அதை உணர்ந்து செயல்படத்தாத நிறவனங்களோ செயலற்று அடையாளம் இழக்கின்றன. ஆனால் புதிய தொழில் நுட்ப வாய்ப்புகள் ஏராளமானவை.

சங்கிலித் தொடராக வரிசை கட்டும்போது அதன் அவசியத்தை அதன் எதிர்கால முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து கொண்டு செயல்படுத்துபவர்கள் புதிய தொழில்களில் வெற்றிக் கொடி நாட்டுகிறார்கள். அப்படி தொழில் நுட்பங்களால் ஏற்படும் வளர்ச்சி மாற்றங்களை உணர்ந்து செயல்படத் துணிபவர்களையே வெற்றி தனது வரவேற்பு வாசலில் அமரவைக்கிறது.

– ttupublication

# கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்

அனைத்தும் கற்றவர் என்ற செருக்குடன் இருந்த புலவர் அம்பல சோமாசி கம்பரைக் காண வந்தார். அப்போது அவர் வீட்டிற்கு முன்னால் சாணி தட்டும் ஒரு பெண்ணிடம் கம்பர் எங்கே என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண்மணி கம்பரைக் காண பலர் வந்துள்ளனர் தாங்கள் சற்று காத்திருங்கள் என்று கூறினாள்.

அதற்கு அந்த புலவர் கோபத்தோடு, கேட்ட கேள்விக்கு ஆம், இல்லை என்று ஒற்றை வார்த்தையில் பதில் கூறாமல் வாயாடியாக இவ்வளவு பேசுகிறாயே நீ என்ன கம்பரிடம் தமிழ் கற்றுக்கொண்டாயா என்று சாணித் தட்டும் பெண்ணைப் பார்த்து கேட்டார்.

உடனே அதற்கு அந்தப் பெண்மணி ஐயா எனக்கு அதற்கெல்லாம் நேரம் ஏது எனது அன்றாட பணிகள் செய்யவே நேரம் சரியாக இருக்கிறது. இருந்தாலும் தாங்கள் விரும்பினால் நான் தங்களிடம் ஒரு விடுகதைக்கு விளக்கத்தை அறிய விரும்புகிறேன். அதற்கு முடிந்தால் தாங்கள் விடை அளியுங்கள் என்று சொன்னாள்.

புலவருக்கு ஆச்சரியம்!. ஒரு சாணி தட்டும் பெண்மணி என்னிடம் கேள்வி கேட்கிறாளே சரி கேளு என்று கூறினார். உடனே அவள் வட்டமாக இருக்கும் வன்னி கொடியில் தாவும்; கொட்டுபவர் கையில் கூத்தாடும்; எரித்தால் சிவசிவ என்பர் அது என்ன என்று கேட்டாள். புலவருக்கு சப்தநாடியும் ஒடுங்கிவிட்டது. அவர் முழிப்பது கண்ட அந்த பெண்மணி, ஐயா முடிந்தால் இன்று கூறுங்கள் இல்லையெனில் நாளை பதில் சொல்லுங்கள் என்று மிகுந்த செருக்குடன் போய்விட்டாள்.

அப்பொழுது வெளியே வந்த கம்பர் அவரை வாருங்கள் என்று அழைத்துச் சென்றார். அவரிடம் அந்தப் பெண்மணி கேட்ட கேள்வியை சொன்னார். அதற்கு கம்பர் அது ஒன்றும் இல்லை அவளுடைய தொழிலை சொல்லி இருக்கிறாள் என்றார். ஐயா எனக்கு புரியவில்லை என்று இந்த புலவர் சொல்ல உடனே கம்பர் வரட்டியைத்தான் அப்படி சொன்னாள்.

வட்டமாக இருக்கும் என்றும் மேலும் அதை வன்னி எனும் நெருப்பில் சுடுவார்கள். (வன்னி மரத்தின் நெருப்பில் தான் வரட்டியை சுடுவார்கள்) சுட்டதும் எடுத்த சாம்பலே திருநீறு ஆகும். அதை நெற்றியில் பூசும் போது சிவ சிவா என்று சொல்லி பூசிக் கொள்வார்கள் அல்லவா. அதைத்தான் அவள் அப்படி சொல்லி இருக்கிறாள் என்றார். அதைக்கேட்டு புவலர் அசந்துவிட்டார். கம்பன் வீட்டில் வறட்டி தட்டும் ஒரு பெண்ணின் தமிழையே நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லையே என்று வாயை மூடிக்கொண்டு சென்றுவிட்டார்.

– B.S. ஜனார்த்தனன்

பதிவு எண்: 16 / 2002

☎ 0452-2679676

## மகாத்மா முதியோர் இல்லம்

Run by : மகாத்மா'ஸ் டிரஸ்ட்

7/5, சஞ்சீவி தெரு, வில்லாபுரம், மதுரை - 625 012.

website : www.mahathmaoldagehome.com E-mail : mmilmalarkulu@gmail.com

நிறுவனர்கள்

| M.S. சந்திரசேகர் | J.R. ரமேஷ் | B.J. மகேசுவர்லால் | T.R. குமரன் | M.R. பிரேம்குமார் |
|---|---|---|---|---|
| 98421-44555 | 97861-40570 | 93444-51607 | 94437-23337 | 93444-51605 |

# விளம்பரங்களால் வியாபாரம் பெருகுமா?

விளம்பரத்தை சர்வ ரோக நிவாரணியாய் நினைத்து விளம்பரம் செய்த மாத்திரம் விற்பனை வெடுக்கென்று கூடி படக்கென்று தங்கள் விற்பனை பிரச்சனை தீரும் என்று விபரீதமாய் கற்பனை செய்கிறார்கள். அப்படி நடக்காத போது விளம்பரத்தின் மீது பழி போடுகிறார்கள்.

பலர் நினைப்பது போல் விளம்பரம் கேட்டதை கேட்ட மாத்திரம் தரும் கர்ப்பக விருட்சம் அல்ல. பெரிய கம்பெனிகளிடம் நிறைய பணம் இருக்கும், விளம்பரத்தில் வாரி இரைத்து அது மெதுவாய் பலன் தந்தால் கூட போதும் என்று நினைப்பார்கள். பெரிய தொழிலதிபர்களால் தங்கள் விளம்பரங்களில் தாங்களே தோன்றுவதைப் போல் நாமும் செய்தால், அவர்களை போல் விரைவாய் வளர்வோம் என்று கருதக்கூடாது. அவர்கள் பல காலமாய் விளம்பரம் செய்து வருபவர்கள். அவர்களை பிடிக்கிறதோ இல்லையோ அவர்கள் பிராண்டை மக்கள் வாங்கி பழகியிருப்பதால் தொடர்ந்து வாங்குகிறார்கள்.

விளம்பரம் பற்றி விவரமாய் உணர்ந்து செயல்படுவது உங்கள் வியாபாரத்திற்கு உசிதம். விளம்பரம் ஒரு ஸ்லோ பாய்சன். மயிலிறகாய் மக்களை வருடி ஒரு நாள் இல்லை ஒரு நாள் கடைக்கு சென்று பிராண்டை வாங்க வைக்கும். ஒரு முறை விளம்பரத்தை கண்ட உடன் நமது பொருளை வாங்க வைக்க விளம்பரத்திற்கு தெரியாது.

பிறகெதற்கு விளம்பரம் செய்கிறோம் என்று உங்களுக்குத் தோன்றும். விளம்பரம் நம்மை சட்டென்று வற்புறுத்தி வாங்க வைக்க அல்ல. பிராண்டை பற்றிய நல்ல அம்சங்களை நம் மனதில் பதிய வைக்கத்தான் விளம்பரம். பிராண்ட் பூர்த்தி செய்யும் தீர்வின் தாக்கம் அதிகரிக்கும் போது பிராண்டை வாங்க தோன்றுகிறது. அவசர அடி ரங்காவாய் அடிதடியாய் விளம்பரத்துக்கு வேலை செய்யத் தெரியாது.

விளம்பரம் மக்கள் மனதில் சின்ன மாற்றங்களை மட்டுமே உருவாக்கும். இந்த சின்ன மாற்றங்கள் தான் கொஞ்சம் கொஞ்சமாய் மனதில் சேர்ந்து நாளடைவில் பெரிய மாற்றமாய் உருவாகிறது. இதனால்தான் விளம்பரத்தால் ஏற்படும் தாக்கம் நமக்கு சட்டென்று தெரிவதில்லை. குழந்தை தினம் வளர்வது எப்படி அதன் பெற்றோர்க்கு தெரியாமல் இருக்கிறதோ அதுபோல, உங்கள் நிறுவனம் அல்லது பொருளின் விளம்பரத்தை தொடர்ந்து செய்து வந்தால் தான் அதன் பலனை நன்கு அனுபவிக்க முடியும். ஓரிரு விளம்பரம் மட்டும் செய்து கடையில் கூட்டம் சேர்ந்து கல்லா ஃபுல்லாகிறதா என்று பார்ப்பது பஞ்ச மாபாதகம்.

விளம்பரம் எனும் எறும்பு ஊற ஊறத்தான் வாடிக்கையாளர் மனம் தேயும். அப்படி ஊறும் அளவிற்கு பணமும் அவசியம். வெறுமனே நிறுவனத்தின் பெயர், தயாரிப்பு போன்ற விபரங்களை மட்டுமே அளிப்பதற்கு விளம்பரம் செய்யமலே இருந்து விடலாம். பணம் மிச்சம். செய்யும் விளம்பரம், நேர்த்தியாகவும் இருக்க வேண்டும். மக்கள் மனதில் பதியும்படியும் இருக்கச்செய்ய வேண்டும். அளிக்கும் விளம்பரம் பொருளின் தன்மைகேற்ப கவர்ச்சிகரமானதாக இருப்பதும் அவசியம். அப்படி செய்யும் விளம்பரம் வாடிக்கையாளர்களிடத்தில் தாக்கத்தை எதிர்பார்க்கலாம்.

உதாரணத்திற்கு, போட்டி நிறைந்த சந்தையில், நம் தயாரிப்பை மட்டும் மக்கள் மனதில் தனியாக பதிய வைப்பதற்கு சில யுக்திகள் உள்ளன. ஒரு பொருள் பிரிவில் பல பிராண்டுகள் இருந்தாலும் அனைத்தையும் வாடிக்கையாளர் தெரிந்து வைத்திருப்பதில்லை. அதிலுள்ள சில பல பிராண்டுகளின் பெயர்கள் மட்டுமே மனதில் நிற்கும். அதே போல் தெரிந்திருக்கும் அத்தனை பிராண்டுகளையும் அலசிப் பார்த்துத் தான் வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஒரு பொருளை வாங்க முடிவெடுக்கும் போது அந்த பிரிவில் ஒரு சில குறிப்பிட்ட பிராண்டுகளை மட்டுமே மனம் அலசி ஆராய்ந்து பார்த்து ஒன்றை வாங்க முடிவெடுக்கிறது. ஆக, பொருள் பிரிவில் பல பிராண்டுகள் இருந்தாலும், சில பிராண்டுகள் மட்டுமே நினைவில் நிற்க அதில் ஒரு சில குறிப்பிட்ட பிராண்டுகளை மட்டுமே மனம் ஷார்ட் லிஸ்ட் செய்கிறது. இந்த ஷார்ட் லிஸ்ட்டை பரிசீலிப்பு தொகுப்பு (Consideration Set) என்பார்கள்.

அதாவது, பிராண்டை பற்றி ஒரு விஷயத்தை ஆணித்தரமாய் சொல்ல வேண்டும். அதைத் தான் மீண்டும் மீண்டும் கூற வேண்டும். "கறை நல்லது" என்று சொன்ன மாத்திரம் "சர்ஃப்" பிராண்ட் நினைவுக்கு வருவது எதனால்? இந்த ஒரு கருத்தை மட்டுமே பல பல ஆண்டுகளாய் சர்ஃப் தன் விளம்பரத்தில் கூறி வருவதால்.

ஆகவே, விளம்பரம் செய்ய நினைப்பவர்கள், தொடர்ந்து விளம்பரம் செய்வதும், அந்த விளம்பரங்கள் மக்கள் மனதை தொடும்படி இருப்பது அவசியம். அப்போது தான் விளம்பரத்தின் பயனை அனுபவிக்க முடியும். - இதழ் குழு





# இறந்தவரின் ஏ.டி.எம் கார்டை கையாள வங்கிகள் கூறும் விதிமுறைகள்!

குடும்பத்தில் ஒருவர் இறந்து விட்டால் அவருடைய வங்கி ஏ.டி.எம் அட்டையை பயன்படுத்தலாமா என்பது பற்றி பலருக்கு தெளிவாக தெரிந்திருக்காது.

வங்கிக் கணக்கு என்பது ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டது. எனவே ஒருவரின் கணக்கிலிருந்து வேறு ஒருவர் பணத்தை எடுப்பது சட்டப்படி தவறு. எனவே, அவர் மீது சட்டப்படியான நடவடிக்கையை எடுக்க முடியும். குடும்பத்தில் அவரைத் தவிர்த்து வேறு யாராவது வாரிசு இருந்து அவர்கள் பிரச்சினை செய்தால் வங்கியானது அவர் மேல் நடவடிக்கை எடுக்கும். ஒருவேளை அவர்கள் இதை பெரிதுபடுத்த வேண்டாம். இனி வரும் காலத்தில் யாரும் இப்படி செய்ய மாட்டோம் என எல்லா வாரிசுகளும், நாமினிகளும் எழுதி வங்கிக்கிளை மேலாளரிடம் ஒப்படைத்தால் மட்டுமே வங்கி மேல் நடவடிக்கை எடுக்காது என்கிறார் வங்கி அலுவலர் ஒருவர்.

பொதுவாக வங்கிக் கணக்கு வைத்திருப்பவர் இறந்தவுடன் அவரது நாமினி மற்றும் வாரிசுதாரர்கள் அதை உடனடியாக வங்கிக்குத் தெரிவிப்பது அவசியம். கணக்கு வைத்திருப்பவர் இறந்து விட்டதற்கான இறப்புச் சான்றிதழ், ஏ.டி.எம் கார்டு, வங்கி பாஸ் புக், காசோலை புத்தகம் ஆகியவற்றுடன் வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை யாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டு கடிதம் எழுதி வங்கியில் தர வேண்டும்.

அதாவது வங்கிக் கணக்குக்கான நாமினி பெயர் குறிப்பிடப்பட்டிருந்தால் அவருடைய பெயருக்கு மாற்றித் தருவார்கள். நாமினி பெயர் குறிப்பிடாமல் ஒன்றுக்கும் மேற்பட்ட வாரிசுகள் இருக்கும்போது அதில் யாரிடம் பணத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதையும் அதற்கு மற்ற வாரிசுகள் ஒப்புதல் தெரிவித்து கடிதம் எழுதிக் கையெழுத்திட்டு வங்கியில் ஒப்படைக்க வேண்டும்.

எழுதித் தரப்பட்ட மேற்கண்ட விவரங்கள் எல்லாம் உரிய ஆவணங்களுடன் ஒப்பிடப்பட்டு சரி பார்க்கப்படும். ஆவணத்தின் படியான உண்மையை உறுதி செய்து கொண்டவுடன்தான் உரியவரிடத்தில் பணம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

முக்கியமாக மேலும் இந்த வாரிசுதாரர்களின் யாராவது வங்கி வதிகளின்படியான நடைமுறைகளை சரியாக பின்பற்றாமல் தன்னிச்சையாக பணத்தை எடுப்பாரெனில் வங்கி அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும். இது முறைகேடாக பணத்தை கையாளுவதற்கு நிகரானது என்றாலும் இதில் வங்கி நேரடியாக தலையிடாது. வங்கியின் ஏ.டி.எம் கார்டு, பின் நம்பர் போன்றவை ஒருவரின் தனப்பட்ட விஷயமாக பார்க்கப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதுவே கணக்கு வைத்திருப்பவர் ஜாயிண்ட் அக்கவுண்ட் வைத்திருப்பவர்களில் ஒருவர் என்று வைத்துக்கொண்டால் அதாவது அது கணவன், மனைவி, அப்பா, மகள் என்றிருந்தால் தனித்தனி ஏ.டி.எம் கார்டு இருக்கும். இப்படியான நிலையில் ஒருவர் இறந்து விட்டால் ஜாயிண்ட் அக்கவுண்டில் உள்ள மற்றொருவர் ஏ.டி.எம் கார்டு மூலம் பணத்தை எடுத்துக்கொள்ள முடியும். ஏனெனில் இருவருக்கும் அந்தப் பணம் உரியைமானது என்றாலும் கணக்கு வைத்திருப்பவர்களின் ஒருவர் இறந்த செய்தியை வங்கிக்குத் தெரிவிப்பது அவசியம் என்கின்றன வங்கி விதிகள்.

இதை மனதில் கொண்டு இது போன்ற சமயங்களில் ஏ.டி.எம் நெட் பேங்கிங் உள்ளிட்ட அனைத்து வங்கி பரிவர்த்தனைகளுக்கும், சட்டப்படியாக செயல்களை மேற்கொள்வதே பாதுகாப்பானது.

*- ttupublication*


AWARDS
Raj Tv
Vasanth Tv
Vijay super
Vijay Tv
Tms Award

ROYAL ROMANTIC
No.7, Pacharisikara thoppu cross street,
Kamarajar Salai, Opp to Old Dhinamani Theatre,
Madurai-9. Tamilnadu.
Website : www.bestnumerologist.com
Youtube / Google Map / Whatsapp Link : 9842111411

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர்
ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்
"ஷர்வ ரக்சன்" MRS
BEST NUMEROLOGIST
பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வசியம் மிகுந்த பெயர்
"எண் கணித ஜோதிட" முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும்
திருமணப் பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்
FOR APPOINTMENT
98421 11411





Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, 2nd Floor, Madurai - 625 001.
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





# ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

---

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj** ®

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY



# மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

---

# பொலீம்

## *Membership Mela* 2020

**புதிய உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெறுகிறது.
புதிதாக இணைய விரும்பும் அங்கத்தினர்கள் இந்த விழாவிற்கு கலந்து கொண்டு பயன்பெற அழைக்கிறோம்.**

நாள்: 12.04.2020 (ஞாயிறு) நேரம்: காலை 10.30 மணி

இடம்: ஸ்ரீமந் நடன கோபால நாயகி மந்திர், தெப்பக்குளம், மதுரை

*வெளிமாவட்டத்தில் உள்ள தொழில்முனைவோர்கள் – சேம்பரில் இணைய கீழ்கண்ட சேம்பரின் சிறப்பு அழைப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்*

T.S. சிவப்பிரகாஷ் - 98652 23373 - திண்டுக்கல்
K.K. தினகரன் - 98409 60833 - சென்னை
K.Ve. நாகராஜன் - 98427 41740 - ஓசூர்
கணேஷ் கொண்டா - 93222 26337 - மும்பை
T.S. ரவிசன் - 90037 87411 - திருப்பூர்
V.N.T. சுரேஷ் - 98430 48849 - வேலூர்
சாந்தி ரகுநாத் - 94432 33903 - ஆரணி
T.S. ஜெயபாலன் - 99022 64195 - பெங்களூரு
N.S. ராஜன் - 98432 60553 - கோவை
D.R. வாசுதேவன் - 93448 89241 - பரமக்குடி
K.S. கிஷோர் குமார் - 84700 14488 - புது டில்லி

**உறுப்பினர்களாக இணைய - தொடர்புக்கு:**

G.R. சுப்பிரமணியன் - 94427 52044, V.R. சேகர் - 93441 04694, T.S.S. நந்தலால் - 99435 08192
L.N.R. தாமோதரன் - 97894 51477, K.R.B. சிவப்பிரகாஷ் - 94433 66251, G.R. விஜய சத்ய நாராயணன் - 98421 66390

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2019-2021
Printed Matter

Date of Posting : 20.03.2020 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2019 - 2021
Date of Publication 20th of Every Month

TÜV INDIA
An ISO 9001:2015 Certified Company

THE CONSTRUCTIVE COMPANY
www.tcco.co.in

Design & Construction of Industrial Buildings, Mixed Use Buildings, Residential Apartments, Academic Institutions, Aircraft Hangars, Uber Luxury Villas, Special Structures.

Land Line: 0452-25 81 450
Email: info@tcco.co.in

Some of our Completed Projects






HEAD OFFICE :
No 264, LIG Colony, Opp. SUNDARAM PARK,
OFF LAKE VIEW ROAD, KK NAGAR , MADURAI - 625 020

VALE SPECIALTY ORTHO CLINIC
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
45, கலெக்டர் ஆபீஸ் ரோடு, ஹோட்டல் ஸ்டார் ரெசிடென்சி எதிரில், அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை - 20.
Ph: 0452-4367597, 97871 91156 email : knsubra@yahoo.com | Web : www.shoulderarthroscopy.co.in

- தீராத மூட்டு வலி உள்ளவர்கள்
- தோள்பட்டை வலி உள்ளவர்கள்
- மாடிப்படி ஏறி / இறங்க சிரமப்படுபவர்கள்
- விளையாட்டு காயம் அடைந்தவர்கள்



Dr. K.N. SUBRAMANIAN MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.

கைத்தறியில் ஓர் புதுமை
Electronic Jacquard



Technical Details :
- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm




Applications :
- Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
- Blankets • Made Ups • Shirting



N.S. Rajan

SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com



T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org